Registered as a news paper.

பக்கங்கள் : பன்னிரண்டு

விலை ரூபா 10.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

யாழ். நகரில் தனித்துவமான
கலைநயம் மிக்க துல்லியமான
அச்சுவேலைகளுக்கு
SP சிறந்த இடம்
சுரபி பதிப்பகம்
267, நாவலர் வீதி யாழ்ப்பாணம்.

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2037 சித்திரை 07 ஹிஜ்ரி 1427 ற.அவ்வல் 22 (20.04.2006) வியாழக்கிழமை இதழ் 202

# புத்தூரில் வெறியாட்டம்

# 5 அப்பாவிகள் படுகொலை





## அதிர்ச்சியில் உறைந்தது குடாநாடு


யாழ்ப்பாணம்

புத்தூர் கிழக்கு - ஊறணி அந்திரான்வெளிப் பகுதியில் ஐந்து அப்பாவி இளைஞர்கள் - இராணுவ மூகாமுக்கு அருகில் வைத்து கொடூரமான முறையில் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

யாழ். குடாநாட்டை அதிர்ச்சியில் உறையவைத்த இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணியளவில் இடம்பெற்றது.

(12 ஆம் பக்கம் பார்க்க)





## செல்போன் மணியை வைத்தே சடலத்தைக் கண்டுபிடித்தேன்!

## கோண்டாவில் வர்த்தகர் நேற்று சுட்டுக்கொலை!

# சடலத்தைக் கண்டுபிடித்தேன்!

## படுகொலை செய்யப்பட்டவரின் தந்தை தெரிவிப்பு

யாழ்ப்பாணம் —

தனது மகனைக் காணவில்லை எனத் தேடிச் சென்றபோது - அவரது கையடக்கத் தொலைபேசிக்கு அழைப்பை ஏற்படுத்திக்கொண்டிருந்ததாகவும் - அந்த அழைப்பு மணியின் சத்தத்தை வைத்தே சடலம் இருந்த இடத்தைக் கண்டுபிடித்ததாக கொல்லப்பட்ட இளைஞர்கமலதாசனின் தந்தை தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

தனது மகன் வழமையாக வீட்டுக்கு வரும் நேரம் கடந்து விட்டதால் அவருடன் கையடக்கத் தொலைபேசியூடாக தொடர்பை ஏற்படுத்தியபோது தொலைபேசிக்கு அழைப்புக் கிடைத்தபோதும் பதில்எதுவும் கிடைக்கவில்லை.

சிறிது நேரத்தின் முன்னர் வீதியில் படையினரின் நடமாட்டம் அதிகரித்திருந்தமையாலும், மகனுக்கு ஏதேனும் நடந்துவிட்டதோ என்ற சந்தேகம் காரணமாக ஓட்டோவில் மகனைத் தேடிச் சென்றபோது காவலரணில் இருந்த படையினர் தம்மை வழிமறித்து எங்கே போகிறீர்கள் எனக் கேட்டனர்.

மகன் வீடு திரும்பவில்லை அவரைத்தேடிச் செல்வதாகக் கூறியபோது படையினர் அப்படி ஒருவரதும் நடமாட்டம் இருக்கவில்லை எனக் கூறி -

(12 ஆம் பக்கம் பார்க்க)

# நேற்று சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம் —

கோண்டாவில் சந்தியில் வர்த்தக நிலைய உரிமையாளர் ஒருவர் நேற்று மாலை அடையாளம் தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

நேற்று மாலை 6.40 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கோண்டாவில் கிழக்கு பழனி ஆண்டவர் வீதியைச் சேர்ந்த தம்பாப்பிள்ளை அம்பிகைபாகன் (வயது 37) என்ற வர்த்தகரே உயிரிழந்தவராவார்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:-

நேற்று மாலை வழமைபோல் பலாலி வீதி கோண்டாவில் சந்தியில் அமைந்துள்ள தனது வர்த்தக நிலையத்தில் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோதே வர்த்தக நிலையத்துக்கு மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத நபர்கள் இருவர் வர்த்தகர்மீது துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டு தப்பிச்சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

துப்பாக்கிப் பிரயோகம் செய்தவரும் மற்றவரும் நீலநிற சேட்டும் கறுப்பு ஜீன்ஸும் படையினர் பயன்படுத்துகின்ற சப்பாத்தும் அணிந்திருந்ததாக சம்பவத்தை நேரில் கண்ட ஒருவர் தெரிவித்தார்.

# கிளிநொச்சிக்கு இன்று பௌயர் வருகிறார்

கொழும்பு —

நோர்வேயின் விசேட சமாதான தூதுவர் ஜோன் ஹன்சன் பௌயர் இன்று கிளிநொச்சிக்கு விஜயம் செய்து அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

நேற்றுமுன்தினம் கொழும்பு வந்த ஜோன் ஹன்சன் பௌயர் - அன்றிரவு பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

எனினும் இந்தச் சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

நேற்று வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவைச் சந்தித்த பௌயர் - நேற்றிரவு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்திக்கத் திட்டமிட்டிருந்தார். ஆனால் இந்தச் சந்திப்பு இடம்பெறவில்லை எனத் தெரியவருகிறது.

புலிகளின் கிழக்குத் தளபதிகளின் பயண ஒழுங்கு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து அரச தரப்பினருடனான சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டதாகத் தெரியவருகிறது.

இதேவேளை - இன்று கிளிநொச்சியில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# புத்தூர் படுகொலை சம்பவத்துக்கு யாழ். அரசியல்துறை கண்டனம்!

கிளிநொச்சி —

தமிழர்கள் தங்களை தாங்களே பாதுகாத்துக் கொள்வதற்கு தயாராகுவதே ஒரேவழி என்று யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி - புத்தூர் படுகொலைச்சம்பவத்தை கண்டித்து வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது--

தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை நிராகரித்து, எமது மக்களின் மனிதாபிமானத் தேவைகளைப் புறந்தள்ளி, எமது தலைமைப்பீடம் மேற்கொண்ட சமாதான சமிக்ஞைகளை தூக்கியெறிந்து- தமிழர்களுடைய இருப்பையே இல்லாது ஒழிக்க முயலும் அரசும், படைகளும், அதனுடன் கூட்டுச்சேர்ந்து இயங்கும் துணை ஆயுதக்குழுக்களும் இராணுவ நெருக்குவாரங் களையும், படுகொலைகளையும் புரிந்து வருகின்றன.

அரசு வன்முறைகளை நிறுத்தும் வகையில் ஜெனீவாவில் இணக்கங்காணப்பட்ட விடயங்களை இன்னும் நடைமுறைப்படுத்தாத அதே நேரத்தில், அதனை முற்று முழுதாக மீறி துணைக்குழுக்களின் செயற்பாடுகளை தீவிரப்படுத்தி, ஊக்குவித்து, பாதுகாப்பளித்து ஆயுதம் வழங்கியும், அப்பாவித் தமிழ் மக்களை படுகொலை செய்தும், சிறுவர்களை கடத்தியும் கொடூரம் புரிந்து வருகின்றன.

இந்தவகையில் யாழ்ப்பாணத்தில் அரச படைகளின் அராஜகம் தலைவிரித்தாடுகின்றது. சாவகச்சேரியில் அதியுயர் கண்காணிப்பு பகுதியில் தமிழ் இளைஞர்களை குறிவைத்து இராணுவத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பருத்தித்துறையில் கைதான மூவரது விளக்கமறியல் நீடிப்பு

பருத்தித்துறை ——

பருத்தித்துறை 2 ஆம் குறுக்குத் தெருவில் வெடிமருந்துகள் மற்றும் துப்பாக்கிகள் வைத்திருந்ததாக இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட 5 நபர்களில் 3 பேரை எதிர்வரும் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிவான் உத்தரவிட்டார்.

பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்ட இந்த மூவரையும் எதிர்வரும் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிவான் க.அரியநாயகம் உத்தரவிட்டார்.

பருத்தித்துறை 2 ஆம் குறுக்குத் தெருவில் இராணுவத்தால் தேடுதல் நடத்தப்பட்டபோது வெடி பொருட்கள் வைத்திருந்ததாகத் தெரிவித்து கைது செய்யப்பட்ட செல்வராசா கிருஷ்ணராசா, கணேஷலிங்கம் விஜயகாந், கிருஷ்ணராஜா திவாகர் ஆகிய மூவரையும் கடந்த 5 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது நேற்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

நேற்றும் இவர்கள் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது எதிர்வரும் 3 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிவான் க.அரியநாயகம் உத்தரவிட்டார்.

இதில் கணேசலிங்கம் விஜயகாந், கிருஷ்ணராசா திவாகர் ஆகிய இரு மாணவர்களும் இந்த மாதம் நடைபெறவுள்ள க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (12)

# இரண்டு பேரைக் காணவில்லை என மனிதஉரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம் ——

யாழ்.குடாநாட்டில் இருவரைக் காணவில்லை என மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகத்தில் உறவினர்களால் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

உரும்பிராய் வடக்கைச்சேர்ந்த கமலநாதன் ராகவன் (வயது 26) என்பவரைக் கடந்த 5 ஆம்திகதி தொடக்கமும், சித்தன்கேணியைச் சேர்ந்த சிவசாமி லோகேஸ்வரன் (வயது 42) என்பவரை கடந்த மாதம் 26 ஆம் திகதியிலிருந்தும் காணவில்லை என அவர்களது உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

காணாமல் போன இருவரும் கடந்த காலங்களில் ஏற்பட்ட போர் அனர்த்தத்தால் மனநிலை பாதிக்கப்பட்டவர்கள் என செய்யப்பட்ட முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த நபர்கள் தொடர்பான தகவல் ஏதேனும் கிடைத்தால் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் தெரியப்படுத்துமாறு ஆணைக்குழு அதிகாரி தெரிவித்தார்.

# ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

நெடுந்தீவு ——

நெடுந்தீவு பிரதேச செயலகப்பிரிவுக்கான மாதாந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று காலை 10 மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் ம.பற்றிக் டிறஞ்சன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் இந்த வருடத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய வேலைத்திட்டங்கள், நாளாந்த நடைமுறைகள் என்பன ஆராயப்படவுள்ளன.

இதேவேளை இந்தக் கூட்டம் இந்த ஆண்டுக்கான முதலாவது கூட்டம் என்பதனால் முக்கியமான தீர்மானங்கள் நிறைவேற்றப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (113)

# அலுவலக நேரத்தில் மாற்றமில்லை

## பொது நிர்வாக அமைச்சு

யாழ்ப்பாணம் ——

அரசாங்க அலுவலகங்களின் அலுவலக நேரம் காலை 9மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரையே என்றும் புதிய சுற்றறிக்கை அனுப்பப்படும் வரை இந்த நேரமே நடைமுறையில் இருக்கும் என்றும் பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

தற்போதைய நேரமாற்றத்துக்கமைய அரச அலுவலகங்கள் காலை 8.30 மணி முதல் மாலை 4.05 மணிவரை இயங்கத் தொடங்கியுள்ளதால் பொது மக்கள் மத்தியில் குழப்பநிலை நிலவி வருகிறது.

இது தொடர்பாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் ஊடகப் பேச்சாளருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது -

ஏற்கனவே அனுப்பப்பட்ட சுற்றறிக்கைப்படி காலை 9மணிமுதல் மாலை 4.45 மணிவரை அலுவலக நேரம் நடைமுறையில் இருக்கும். இந்த நேரம் மாற்றப்படுவது தொடர்பாக எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

எனவே, புதிய சுற்றறிக்கை அனுப்பப்படும்வரை அலுவலக நேரம் மற்றும் காசு கொடுக்கல் வாங்கல் நேரம் என்பன ஏற்கனவே இருந்தவாறு அமுல் படுத்தப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பொதுக் கூட்டமும் பட்டமளிப்பு விழாவும்

யாழ்ப்பாணம் ——

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் பொதுக்கூட்டமும், சைவப்புலவர் பட்டமளிப்பு விழாவும் எதிர்வரும் 23 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு வண்ணை நாவலர் மகாவித்தியாலய மண்டபத்தில் சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் இ.குமாரவேல் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்த நிகழ்வில் வரவேற்புரையை சைவப்புலவர் சி.நந்தகுமார், ஆசியுரையை நல்லை ஆதினமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த சுவாமிகள், வாழ்த்துரையை கலாநிதி சைவபூஷணம் வ.கந்தசாமி அகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

சிறப்புரைகளை 'மிகு சைவத்துறை விளங்க' எனும் தலைப்பில் சைவப்புலவர் சாமித்தம்பி தில்லைநாதன், 'சைவப்புலவர்களும் சமூகப் பணியும்' எனும் கருப்பொருளில் சைவப்புலவர் இ.நித்தியானந்தன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

# மக்கள் பொலித்தீன் பாவனையை தாமாகவே தவிர்க்க வேண்டும்

## சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் தெரிவிப்பு

சாவகச்சேரி ——

பொதுமக்கள் தமக்கும், சூழலுக்கும் ஏற்படும் பாதிப்புக்களை உணர்ந்து பொலித்தீன் பாவனையைத் தவிர்க்க வேண்டும் என்று சாவகச்சேரி நகரசபை செயலாளர் வேண்டுகோள் விடுத்தார்.

நகரசபை மாநாட்டு மண்டபத்தில் சுற்றுச் சூழல் பாதுகாப்பு தொடர்பாக சனசமூக நிலையம் மற்றும் பொது நிறுவனப் பிரதிநிதிகளுடனான சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் - உணவகங்களில் வாழை இலை, மடல் போன்றவற்றையே உணவு பரிமாறுவதற்கு பயன்படுத்துவது கட்டாயமாக்கப்பட வேண்டும்.

அத்துடன் வீட்டில் சேரும் அன்றாட கழிவுப் பொருட்களை- பிளாஸ்ரிக் பொருட்கள், கண்ணாடிப் பொருட்கள், பொலத்தீன் பொருட்கள் என தரம்பிரித்து அப்புறப்படுத்தி அருகிலுள்ள சனசமூக நிலையங்கள் ஊடாகவும், பொதுச் சந்தைப் பகுதி கழிவுகளை கைத்தொழில் வணிகர் சங்கம் ஊடாகவும் நகரசபைக்கு அறிவிக்கும் போது அதை அப்புறப்படுத்தவும், பிளாஸ்ரிக், கண்ணாடி பொலித்தீன் பொருட்களை கொள்வனவு செய்வதற்கும் ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், தேவையான உதவிகளையும், ஆலோசனைகளையும் நகரசபை நிர்வாகம் வழங்கவேண்டும் என்றும், சனசமூக நிலைய உறுப்பினர்கள் தத்தமது கிராமங்களில் வீடு தோறும் பிரசாரம் செய்து இதனை நடைமுறைப்படுத்த ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்றும் நகரசபைச் செயலாளர் ஆ.குணமணி தேவி கேட்டுக்கொண்டார். (29)

# சின்னஞ் சிறு செய்திகள்

## முதற்கட்ட கொடுப்பனவு

சாவகச்சேரி ——

பிரதி புதன்கிழமை தோறும் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் யாழ்மாவட்ட வீடமைப்பு அதிகார சபையால் வீடமைப்பாளர்களுக்கு ரூபா 50 ஆயிரம் உதவிப்பணம் கட்டம் கட்டமாக வழங்கப்படவுள்ளது. முதற்கட்டமாக 10 ஆயிரம் ரூபா தற்போது வழங்கப்படுகிறது. (29)

## கடையடைப்புக்கு அழைப்பு!

யாழ்ப்பாணம் ——

கடந்த வெள்ளிக்கிழமை இனந்தெரியாத துப்பாக்கி தாரியால் யாழ்ப்பாணம் முனீஸ்வரன் வீதியில் சுட்டுக் கொல்லப்பட்ட மீராமொகிதீன் ஜீனைத் அஸ்மி என்பவரின் கொலையைக் கண்டிக்கும் முகமாக நாளை வெள்ளிக்கிழமை சகல மக்களும் வர்த்தக நிலையங்களை பூட்டியும், கறுப்பு வெள்ளைக் கொடிகளைப் பறக்கவிட்டும் ஹர்த்தால் அனுஷ்டிக்கும்படி முஹம்மதியா ஜிம்மாப் பள்ளிவாசல் நிர்வாகத்தினர் வர்த்தகர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

## முதியோர் அடையாள அட்டை

யாழ்ப்பாணம் ——

முதியோர் அடையாள அட்டை பெறுவதற்காக புகைப்படம் எடுக்கும் நிகழ்வு இன்று பி.ப 4 மணிக்கு டி.எம்.ஐ கல்வி நிலையத்துக்கு ரூபா 30 உடன் வருகை தரும்படி ஜே.78 கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த அத்தியடி முதியோர் சங்கம் கேட்டுள்ளது.

## பயிற்சிப் பட்டறை

சாவகச்சேரி ——

தென்மராட்சிப் பிரதேச கிராம சேவை உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிப் பட்டறை நேற்று முதல் தென்மராட்சி பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்று வருகிறது. நாளை வரை இந்த நிகழ்வு இடம் பெறும். (29)

## பொருளியல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம் ——

2006 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சையை நோக்காகக் கொண்டு நாளை மறுதினம் யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் பொருளியல் பாடம் தொடர்பான வழிகாட்டல் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

மாலை 3 மணி முதல் 6 மணி வரை இந்தக் கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது.

ஆசிரியர் வே.கருணாகரனால் நடத்தப்படும் இந்தக் கருத்தரங்கில் 2007 ஆம் ஆண்டு உயர்தரப் பிரிவு மாணவர்களும் பங்குபற்றமுடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நடேசர் அபிஷேகம்

நெடுந்தீவு ——

நெடுந்தீவு கிழக்கு ஆலமாவனப் பிள்ளையார் ஆலயத்தில் நாளை சிதம்பர நடராஜர் அபிஷேகம் மிகவும் சிறப்பான முறையில் இடம்பெறவுள்ளது.

காலை 8 மணிமுதல் கிரியைகள் ஆரம்பமாகி தொடர்ந்து சங்காபிஷேகமும் இடம்பெறுவதுடன், பகல் 12 மணிக்கு நடேசரபிஷேகமும், சிறப்பு வழிபாடுகளும் நடைபெறும். அத்துடன் அன்னதானமும் வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (113)


# முகாமைத்துவக் கல்லூரி

முகாமைத்துவக் கல்லூரியினால் நடைமுறைப்படுத்தப்படும் aat கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் தகைமையுடையவர்களிடமிருந்து கோரப்படுகின்றது.

**தகைமைகள்**

- க.பொ.த. சாதாரண தரத்தில் 6 பாடங்களில் சித்தி அல்லது
- க.பொ.த. உயர்தரத்தில் இரண்டு பாடங்களில் சித்தி

மேற்படி தகைமைகளை உடையோர் தங்களது விண்ணப்பங்களை 15.05.2006 க்கு முன்னதாக - இணைப்பாளர், முகாமைத்துவக் கல்லூரி, இல.139, ஜெயந்தி நகர், கிளிநொச்சி எனும் முகவரிக்கு நேரடியாகவோ, பதிவுத்தபால் மூலமோ அனுப்பிவைக்கவும்.

மாதிரி விண்ணப்பப் படிவங்களை கல்லூரியில் பெற்றுக்கொள்ளலாம்.

- விரிவுரைகள் சனி ஞாயிறு தினங்களில் மட்டும் நடைபெறும்.

இணைப்பாளர்
இல.139,
மீனாட்சி அம்மன் கோவிலடி,
ஜெயந்தி நகர்,
கிளிநொச்சி.

(2470)

**றேடியோ, ரீ.வி. தொழில்நுட்பவியலாளர்கள் தேவை**

பிரபல நிறுவனம் ஒன்றிற்கு றேடியோ, ரீ.வி. பழுதுபார்க்கும் அனுபவமுடைய தொழில்நுட்பவியலாளர்கள் உடனடியாகத் தேவை. யாழ்ப்பாணம், நெல்லியடி மற்றும் கொழும்பு பகுதிகளில் வேலை பார்க்க விருப்பமுடையவர்கள் தங்கள் சுயவிபரக் கோவையை கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

விளம்பர இல.52,
மே/ப நமது ஈழநாடு, 267, நாவலர்வீதி,
யாழ்ப்பாணம். [C/5265]

DAIDO Mopet



48CC

Koyo ரேசர்கள்

DAIDO உதிரிப்பாகங்கள் YAMATO



ஏகமுகவர்
சொன்டிப் மோட்டர் என்டர்பிறைஸ் (பிறைவேட்) லிமிட்டட்
60B, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு - 10.
தொலைபேசி : 011-2341580-1, 2438770.
பக்ஸ் 011-2454608
E.mail: zme@slt.lk

**நாதன்ஸ்** யாழ்ப்பாணம்

எஸ்.ஜே.சூர்யா,
நயன்தாரா,
விவேக்
நடித்த



கள்வனின் காதலி

கா.நே : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

**ராஜா** யாழ்ப்பாணம்

புதுவருட வெளியீடு
பரத்,
மல்லிகா கபூர்
மற்றும் பலர்
நடித்த



அழகாய் இருக்கிறாய் பயமாய் இருக்கிறது

இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின வெளியீடு

ப.நேரம் : 10.30,2.30,6.30,9.30

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

பரத், சந்தியா
மற்றும் பலர் நடித்த
காதல்

கா.நே : (பு.நே) 10.30, 2.15, 5.30

**மனோகரா** யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின அதிரடி வெளியீடு
அஜித்குமார், சதா மற்றும் பலர் நடித்த
திருப்பதி



காட்சி நேரம்10.30,2.30,6.30,9.30

# போலியான சமாதான முயற்சிகளில் அரசு மூழ்கிக் கொண்டிருக்கக்கூடாது

## என்கிறது ஜே.வி.பி.



கொழும்பு —

போலியான சமாதான முயற்சிகளில், இனியும் மூழ்கி இருக்காமல், விடுதலைப் புலிகளின் சதித் திட்டங்களை முறியடிக்க, அனைத்து சக்திகளையும் ஒன்று திரட்ட அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஜே.வி.பி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

படையினரதும், பொது மக்களினதும் உயிர்களை விடுதலைப் புலிகளுக்குப் பலி கொடுக்காமல், அரசாங்கம் உடனடியாக எதிர் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

புது வருடத்தில் மட்டும் 30 படையினரின் உயிர்களைப் புலிகள் பறித்துள்ளனர். போலியான போர்நிறுத்த உடன்படிக்கை மூலம், அரசாங்கத்துக்குச் சமமான உரிமைகளை அனுபவித்து வரும் புலிகள் தொடர்ந்தும் வன்முறைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இணைத்தலைமை நாடுகளின் பிரதிநிதிகள் கிளிநொச்சிக்குச் சென்று விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்திய பின்னரே, புலிகளின் தாக்குதல்கள் அதிகரித்துள்ளன என்பதை நாம் கவனத்திலெடுக்க வேண்டும். சமாதானப் பேச்சுவார்த்தைக்கு ஜே.வி.பியே தடையாகவுள்ளதெனக் கூறிவந்த சர்வதேச சமூகம், ஜெனிவா பேச்சுக்கள் எதனால் தடைப்படுகின்றன என்பதை வெளிக்காட்ட வேண்டும்.

தமக்குத் தேவையான முறையில் கடல் வழிப் பயணத்தை மேற்கொள்ள முடியவில்லை என்பதற்காகப் பேச்சுக்கு வர முடியாதெனப் புலிகள் கூறுவதை எவ்வாறு நியாயப்படுத்த முடியும். அரசாங்கத்தின் வசதிகளின்றி கிழக்குக்குச் செல்ல அச்சமடைந்துள்ள புலிகள், எவ்வாறு வட - கிழக்குத் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாவர்.

புலிகளின் எதிரி அரசாங்கமாகும். இந்த நிலையில் எதிரி விமான வசதி வழங்கவில்லை என்பதற்காகப் பேச்சுக்கு வர முடியாதெனக் கூறிய முதல் அமைப்பு புலிகளேயாகும்.

பேச்சில் கலந்துகொள்ள விடுதலைப் புலிகளுக்கு விருப்பமில்லை. தாக்குதல்கள் மூலம் இதையே புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளை முறியடிக்க அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லையென்றே நாம் கருதுகிறோம்.

திருகோணமலையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவத்தின்போது சிங்கள மக்கள் சட்டத்தைக் கையிலெடுக்கும் நிலைமை ஏற்பட்டது. புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளைத் தடுப்பதற்கு அரசாங்கம் நேரடியான செயற்பாடுகளை மேற்கொண்டால் மட்டுமே பொதுமக்கள் சட்டத்தைக் கையிலெடுக்கும் நிலையைத் தவிர்க்க முடியும்.

எனவே, இனியும் போலி சமாதானச் செயற்பாடுகளில் அரசாங்கம் முடங்காமல், புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எதிராக உடனடி அவசிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்துகிறோம்.

அத்துடன், புலிகளை எப்பொழுதும் அரவணைத்துச் செல்ல சர்வதேச சமூகம், புலிகளின் தாக்குதல் நடவடிக்கைகளை அவதானித்த பின்னராவது புலிகள் குறித்து தீர்க்கமான முடிவை மேற்கொள்ள வேண்டும்.

புலிகளின் பயங்கரவாத செயற்பாடுகளை தோற்கடிப்பது - சட்ட ரீதியான முறையில் மக்கள் ஆணையைப் பெற்ற அரசாங்கத்தின் கடமையாகும். இதை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

எனவே, எம்மாலான அனைத்து சக்திகளையும் திரட்டி விடுதலைப் புலிகளிடமிருந்து இந்த நாட்டைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மோசடி ஆவணங்கள் காணாமற் போவதாக தகவல்!

கொழும்பு —

தெற்காசியாவை உலுக்கியுள்ள இலங்கையின் வற்வரி மோசடி ஆவணங்கள் காணாமல் போவது தொடர்பாக இரகசியப் பிரிவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இலங்கையின் வற்வரி மோசடியானது மொத்தம் 3 ஆயிரத்து 500 கோடி ரூபா என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த மோசடி தொடர்பான ஆவணங்கள் உள்நாட்டு வரி வருவாய் திணைக்கள வற் பிரிவிலிருந்து தொடர்ந்து காணாமல் போவதாகவும், இது தொடர்பாக உரிய விசாரணைகள் தொடங்கப்பட்டுள்ளதாகவும் இரகசியப் பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

வற் வரி மோசடியில் மொத்தம் 8 கோடீஸ்வரர்களுக்குத் தொடர்பிருப்பதாகவும், இவர்களில் 4 பேர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாகவும் இரகசியப் பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

# சர்வதேச தமிழ் செய்தியாளர் ஒன்றியம் ஆனந்தி தலைமையில் உருவாக்கம்!

கொழும்பு —

லண்டனைத் தலைமையகமாகக் கொண்டு சர்வதேச தமிழ் செய்தியாளர் ஒன்றியம் கடந்த 9 ஆம் திகதி உதயமாகியுள்ளது.

இது தொடர்பாக சர்வதேச தமிழ் செய்தியாளர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் -

உலகெங்கும் வாழும் தமிழ் செய்தியாளர்கள் அனைவரையும் ஒன்றிணைக்கும் நோக்குடன் சர்வதேச தமிழ் செய்தியாளர் ஒன்றியம் என்ற அமைப்பு லண்டனில் தொடங்கப்பட்டுள்ளது.

பத்திரிகை, சஞ்சிகை, வானொலி, தொலைக்காட்சி மற்றும் இணையத் தளங்கள் முதலான அனைத்து செய்தி ஊடகங்களிலும் பணியாற்றுபவர்களும் செய்தி ஊடகங்களுடன் தொடர்புள்ள செய்தியாளர்களும், எழுத்தாளர்களும் இந்த அமைப்பில் இணைந்து கொள்ளலாம்.

சர்வதேச தமிழ் செய்தியாளர் ஒன்றியம் அதன் உறுப்பினர்களின் பாதுகாப்பையும், உரிமைகளையும், சுதந்திரத்தையும் பாதுகாக்க முயல்வதுடன் - அவர்களின் தொழில் சார்ந்த முன்னேற்ற நடவடிக்கைகளிலும் உதவிகளை வழங்குவதற்கான முயற்சிகளையும் மேற்கொள்ளும்.

அத்துடன், இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு நெருக்கடிகள் மற்றும் அவர்களின் அடிப்படை உரிமைகள் தொடர்பாகவும் இந்த ஒன்றியம் விசேட கவனம் செலுத்தும்.

லண்டன் - சிவயோகம் கலையரங்கில் கடந்த 9 ஆம் திகதி தொடக்கி வைக்கப்பட்ட சர்வதேச தமிழ் செய்தியாளர் ஒன்றியத்தின் நடப்பு ஆண்டுக்கான தலைவராக பி.பி.சி. தமிழோசையின் முன்னாள் மூத்த தயாரிப்பாளர் ஆனந்தி சூரியப்பிரகாசம் தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார்.

ஒன்றியத்தின் துணைத் தலைவராக தமிழ் பத்திரிகையாளர் ஒன்றியத்தின் முன்னாள் தலைவர் இரா. துரைரத்தினமும், செயலாளராக டென்மார்க்கைச் சேர்ந்த பத்திரிகையாளர் குகனும் தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றனர்.

இவர்களுடன் ஆறு பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவுசெய்யப்பட்டிருக்கிறது.

லண்டனில் தலைமையகத்தைக் கொண்டு இயங்கும் இந்த அமைப்பின் கிளை நிறுவனங்களை குறைந்தது ஒவ்வொரு நாட்டிலும் அமைப்பதென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக நாடுகளில் பரந்து வாழும் தமிழ் செய்தியாளர்கள், சர்வதேச தமிழ் செய்தியாளர் ஒன்றியத்தில் இணைந்து கொள்வதன் மூலம் செய்தியாளர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளை நிவர்த்தி செய்வதற்கு வழி வகுக்க முடியும் என்றும் ஒன்றியத்தின் தலைவர் ஆனந்தி சூரியப்பிரகாசம் தெரிவித்தார்.

சர்வதேச தமிழ் செய்தியாளர் ஒன்றியத்தின் அமைப்பு வேலைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வரும் வேளையில் - ஒன்றியத்துக்குரிய இணையத்தளம் மற்றும் இணைய முகவரி மூலம் சகல பத்திரிகையாளர்களும் ஒன்றியம் குறித்த மேலதிக விபரங்களை அறிந்து கொள்வதுடன், ஒன்றியத்தில் இணைந்து கொள்வதற்கான விண்ணப்பப் படிவத்தையும் பெற்றுக்கொள்ள முடியும் என்று ஒன்றியத்தின் செயலாளர் குகன் தெரிவித்தார்.

# பஸ் கட்டணத்தை அதிகரிக்க அனுமதிக்காவிடில் போராட்டம்

## தனியார் பஸ் உரிமையாளர்கள் போர்க்கொடி

கொழும்பு —

பஸ் கட்டணத்தை 26 வீதத்தால் அதிகரிப்பதற்கு அனுமதியளிக்காவிட்டால் போக்குவரத்து சேவைகளிலிருந்து விலகவுள்ளதாக தனியார் பஸ் உரிமையாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

ஒரு லீற்றர் டீசலின் விலை 8 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதால் தனியார் பஸ் உரிமையாளர்களுக்கு பெருமளவு நட்டம் ஏற்படுவதால் 26 வீத பஸ் கட்டண அதிகரிப்பை இன்று முதல் அமுல்படுத்துமாறு தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்குத் தெரிவித்துள்ளது.

இன்று முதல் பஸ் கட்டண அதிகரிப்புக்கு அனுமதியளிக்காவிட்டால் டீசல் விலையேற்றத்தால் ஏற்படும் நட்டத்தால் பஸ் போக்குவரத்து நடவடிக்கையிலிருந்து விலகுவதற்குத் தாங்கள் தீர்மானித்திருப்பதாக தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

இதனிடையே தனியார் பஸ் உரிமையாளர்கள் கேட்கும் அளவு கட்டண அதிகரிப்புக்கு இடமளிக்க முடியாது என்றும், சில கட்டண அதிகரிப்புகள் வரும் நாட்களில் அமுல்படுத்தப்படும் என்றும் போக்குவரத்து அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி தெரிவித்தார்.

# தமிழருக்கு அதிகாரங்களை வழங்கினால் இறுதித் தீர்வு ஏற்படும் என்கிறார் பீரிஸ்!

கொழும்பு —


தமிழர்களுக்கு இலங்கை அரசாங்கம் அதிக அதிகாரங்களை வழங்குமானால் அமைதியான இறுதி தீர்வு ஒன்று ஏற்பட வாய்ப்புள்ளதாக ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

சென்னையில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற விரிவுரை ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தியாவின் ஜனநாயக வழியில் சமஷ்டி முறையை சில சிறிய மாற்றங்களுடன் இலங்கையில் அமுல்படுத்த முடியும்.

சமூக ஈடுபாட்டுடன் தமிழீழ விடுதலைப் புலிகளும், இலங்கை அரசாங்கமும், நோர்வே அனுசரணையுடன் பேச்சுவார்த்தையை நடத்தினால் அது வெற்றி பெற வாய்ப்புள்ளது.

இந்த நிலையில், போர் நிறுத்த உடன்படிக்கையின்படி தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இருந்து பிரிந்து சென்ற அணியின் ஆயுதங்களைக்




களைவதில் தோல்வி ஏற்பட்டதன் காரணமாகவே தமிழீழ விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைகளில் இருந்து விலகியிருந்ததாகவும் அவர் அங்கு குறிப்பிட்டார்.

# சமாதான முயற்சிகளில் அரசு அக்கறையற்று செயற்படுகிறது

## சுரேஷ் பிரேமச்சந்திரன் குற்றச்சாட்டு



கொழும்பு —

சமாதான முயற்சிகளில் அரசாங்கம் அக்கறையற்று செயற்படுவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது-

இலங்கை குடிமக்களாகத் தமிழர்களை அரசாங்கம் கருதியிருந்தால் தனது சொந்த விமான சேவையை விடுதலைப் புலிகளுக்கு வழங்கியிருக்க வேண்டும். நாங்கள் வேறு நாட்டிலிருந்து வந்தவர்கள் அல்ல. தமிழர்களும் இந்த நாட்டுக்கு வரிகளைச் செலுத்தி வருகின்றனர்.

தமிழ் மக்களது மறுக்கப்பட்ட உரிமைகளை அடையாளம் கண்டு கொள்ள அரசாங்கம் தவறிவிட்டது. அமைதி முயற்சிகளில் அரைமனதுடனேயே அரசாங்கம் செயற்படுகிறது.

அரசாங்கம் இப்போது கூறுவது போல் முன்னரே தனியார் ஹெலிகளையோ அல்லது விடுதலைப் புலிகளின் சொந்த விமானங்களையோ பயன்படுத்த இணக்கம் தெரிவித்திருந்தால் தற்போதைய சிக்கல்கள் எதுவும் ஏற்பட்டிருக்காது எனத் தெரிவித்தார்.

# மக்களை முட்டாளாக்குவதற்காக உருவாக்கப்பட்டதே மகிந்த சிந்தனை

## ஐ.தே.க குற்றச்சாட்டு

கொழும்பு —

மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக மகிந்த சிந்தனை என்ற பெயரில் பொய்யான வாக்குறுதிகளை அரசாங்கம் பெற்றுள்ளமை நிரூபிக்கப்பட்டு வருவதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

அந்தக் கட்சியின் பிரதிப் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் கூறியதாவது -

ஜெனிவாப் பேச்சுக்களுக்குப் பின்னர் 60 இற்கும் மேற்பட்ட படைத்தரப்பினர் கொல்லப்பட்டனர். மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற பின்னர் கடந்த 4 மாதங்களில் மட்டும் 250 இற்கும் மேற்பட்ட படைத்தரப்பினர் கொல்லப்பட்டுள்ளனர். நாட்டின் பாதுகாப்பு தற்போது பாரிய சிக்கலுக்கு முகம் கொடுத்து வருகிறது.


அதேபோல் எரிபொருள் விலையேற்றத்தால் வாழ்க்கைச் செலவீனம் அதிகரித்துப் பாரிய பொருளாதார நெருக்கடியும் ஏற்பட்டுள்ளது.

அமைதி முயற்சிகளை மூன்று மாதங்களில் நிறைவு செய்வோம் என்றும் நாட்டின் பொருளாதாரத்தை முன்னெடுத்துச் செல்வோம் என்றும் மகிந்த சிந்தனையில் கூறப்பட்டிருந்தது.

இந்த சிந்தனையானது இப்போது உடைந்து நொருங்கிப் போயுள்ளதுடன் நாட்டையும் சீர்குலைவுக்குள்ளாக்கியுள்ளது .

தேர்தலின் போது மக்களை முட்டாளாக்கி அவர்களது வாக்குகளைப் பெறுவதற்காகவே இந்த மகிந்த சிந்தனை உருவாக்கப்பட்டது எனத் தெரிவித்தார்.

# 6 விக்கெட்டுக்களால் பாகிஸ்தான் இந்தியாவைத் தோற்கடித்தது!



அபுதாபி

இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையே நேற்றுமுன்தினம் ஐக்கிய அரபு எமிரேட்ஸின் -அபுதாபியில் நடைபெற்ற சர்வதேச ஒருநாள் போட்டியில் பாகிஸ்தான் அணி 6 விக்கெட்டுக்களால் இந்திய அணியைத் தோற்கடித்தது.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் பாகிஸ்தானை உலுக்கிய பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்வுக்காக ஒழுங்குசெய்யப்பட்ட நலநிதி காட்சிப்போட்டியில் விளையாட இரு அணிகளும் இணங்கியிருந்தன.

இரு ஒருநாள் போட்டிகளைக் கொண்ட தொடரில் முதல்போட்டி நேற்றுமுன்தினம் அபுதாபியில் நடைபெற்றது.

இதில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாட ஆரம்பித்தது.

ஆரம்ப வீரர்களாக உத்தப்பா - ராவிட் ஜோடி களமிறங்கியது. இருவரும் நிதானமாகத் துடுப்பெடுத்தாடத் தொடங்கினர்.


இந்த நிலையில் இந்திய அணியின் முதலாவது விக்கெட் ஸ்கோர் 25 ஐ எட்டியபோது சரிக்கப்பட்டது.

24 பந்துகளில் 12 ஓட்டங்களைப் பெற்ற உத்தப்பா - நவீட் உல் ஹசனின் பந்தை, மொகமட் யூசுப்பிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து பதான் களமிறங்கினார். எனினும் ஸ்கோர் 48 ஐ எட்டியபோது அணித் தலைவர் ராவிட் ரன் அவுட் முறையில் ஆட்டமிழக்கநேரிட்டது. 29 பந்துகளை எதிர்கொண்ட ராவிட், 3 பவுண்டரிகளுடன் 20 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

இந்த நிலையில் பதானுடன் -யுவராஜ் ஜோடி சேர்ந்தார். எனினும் அவரால் நிலைத்துநின்று ஆடமுடியவில்லை. ஸ்கோர் 65 ஆக இருந்தபோது யுவராஜின் விக்கெட் வீழ்த்தப்பட்டது.

7 ஓட்டங்களை மாத்திரமே பெற்ற யுவராஜ், இப்திகார் அஞ்சும் பந்தை



கம்ரல் அக்மலிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து பதானுடன் - ரெய்னா துணைசேர்ந்தார். இந்த நிலையில் பதானின் விக்கெட்டும் வீழ்த்தப்பட்டது.

49 பந்துகளை எதிர்கொண்டபோதும் 26 ஓட்டங்களை மாத்திரமே பெற்ற பதான், ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்தது பவிலியன் திரும்பினார்.

ஸ்கோர் 72 ஐ எட்டுவதற்குள் 4 முக்கிய விக்கெட்டுக்களை இழந்து இந்திய அணி தள்ளாடிக்கொண்டிருந்தபோது, அடுத்துக் களமிறங்கிய வேணுகோபால் ராவ் - ரெய்னா ஜோடியின் இணைப்பாட்டம் இந்திய அணியின் ஸ்கோரை கணிசமாக



உயர்த்தியது.

ஸ்கோர் 136 ஆக இருந்தபோது இந்த ஜோடி பிரியநேரிட்டது. 67 பந்துகளில் 40 ஓட்டங்களை எடுத்த ரெய்னா, அப்ரிடியின் பந்தை இப்திகார் அஞ்சுமிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து டோனி களமிறங்கினார். அதிரடி ஆட்டக்காரரான டோனி 3 ஓட்டங்களை மாத்திரமே பெற்று - சொகைப் மலிக்கால் போல்ட் செய்யப்பட்டு ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய அகார்கர், ரமேஸ் பவார், ஹர்பஜன் சிங், ஸ்ரீசாந்த் முறையே 12, 5, 3, 0 என சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

இந்திய அணி சார்பில் வேணுகோபால் ராவ் சிறப்பாக விளையாடி ஆட்டமிழக்காமல் 61 ஓட்டங்களை இந்திய அணிக்குப் பெற்றுக்கொடுத்தார்.

இந்த நிலையில் இந்திய அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 197 ஓட்டங்களைப் பெற்றது.


பந்துவீச்சில் சொகைப் மலிக் 3, நவீட் உல் ஹசன், இப்திகார் அஞ்சும், அப்ரிடி தலா 1 விக்கெட்டைக் கைப்பற்றினர்.

198 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற நிலையில் பாகிஸ்தான் அணி துடுப்பெடுத்தாட ஆரம்பித்தது.

பாகிஸ்தான் அணி சார்பில் ஆரம்ப வீரர்களாக சொகைப் மலிக் -இம்ரான் பர்கத் ஜோடி களமிறங்கியது.

இருவரும் பொறுமையாக விளையாடி பாகிஸ்தான் அணியின் ஸ்கோரை கணிசமாக உயர்த்தினர்.

இந்த நிலையில் ஸ்கோர் 42 ஐ எட்டியபோது ஆரம்ப ஜோடி பிரிந்தது. 34 பந்துகளில் 12 ஓட்டங்களைப் பெற்ற சொகைப் மலிக், ஸ்ரீசாந்தின் பந்தை ராவிட்டின் பிடிகொடுத்து ஆட்ட



மிழந்தார்.

அடுத்து யுனிஸ்கான் களமிறங்கினார். எனினும் ஸ்கோர் 60 ஆக இருந்தபோது பாகிஸ்தான் அணியின் அடுத்த விக்கெட்டாக இம்ரான் பர்கத் வீழ்த்தப்பட்டார்.



41 பந்துகளில் 30 ஓட்டங்களைப் பெற்ற இம்ரான் பர்கத், அகார்கரால் போல்ட் செய்யப்பட்டு வெளியேறினார்.

இதையடுத்து இன்சமாம் களமிறங்கினார். யுனிஸ்கான் - இன்சமாம் ஜோடியின் இணைப்பாட்டம் பாகிஸ்தான் அணியின் ஸ்கோரை கிடுகிடுவென் உயர்த்தியது.

ஸ்கோர் 146 ஆக இருந்தபோது இன்சமாம் ஆட்டமிழந்தார். 73 பந்துகளில் 40 ஓட்டங்களைப் பெற்ற இன்சமாம், பவாரின் பந்தை வேணுபோல் ராவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இந்த நிலையில் யுனிஸ்கான் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி அரைச் சதத்தைக் கடந்தார்.

அடுத்து மொகமட் யூசுப் களமிறங்கினார். 1 ஓட்டத்தை மாத்திரமே பெற்ற மொகமட் யூசுப் வந்த வேகத்திலேயே பவிலியன் திரும்பினார்.

இதையடுத்து கம்ரல் அக்மல் களமிறங்கினார். யுனிஸ்கான் - கம்ரல் அக்மல் ஜோடியின் இணைப்பாட்டத்தின்மூலம் பாகிஸ்தான் அணி தனது வெற்றி இலக்கை அடைந்தது.

இந்த நிலையில் பாகிஸ்தான் அணி 48.3 ஆவது ஓவரில் 4 விக்கெட்டுக்களை இழந்து 201 ஓட்டங்களைப் பெற்று இந்திய அணியை 6 விக்கெட்டுக்களால் தோற்கடித்தது.

பந்துவீச்சில் அகார்கர் 2, ஸ்ரீசாந்த, பவார் தலா 1 விக்கெட்டைக் கைப்பற்றினர்.

## செஞ்சூரியன் டெஸ்டில் நியூஸிலாந்து அணி தோல்வி

செஞ்சூரியன்

தென்னாபிரிக்க - நியூஸிலாந்து அணிகளுக்கிடையே செஞ்சூரியனின் நடைபெற்றுவரும் முதலாவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணி 128 ஓட்டங்களால் - நியூஸிலாந்து அணியைத் தோற்கடித்தது.

இந்தப் போட்டியில் முதலாவது இனிங்ஸில் தென்னாபிரிக்க அணி 276 ஓட்டங்களையும், நியூஸிலாந்து அணி 327 ஓட்டங்களைப் பெற்றது. 51 ஓட்டங்களால் நியூஸிலாந்து அணி தென்னாபிரிக்க அணியைவிட முன்னிலை பெற்றிருந்தது.

இந்த நிலையில் இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி நேற்றுமுன்தினம் ஆட்டநேர முடிவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 280 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இதில் ஸ்ரெய்ன் 5 ஓட்டங்களையும், என்ரினி ஓட்டமெதையும் பெறாமல் ஆட்டமிழக்காதிருந்தனர்.

நேற்று இருவரும் ஆட்டத்தைத் தொடர்ந்தனர். இதில் என்ரினி 16 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். 7 ஓட்டங்களுடன் ஸ்ரெய்ன் களத்திலிருந்தார்.


இந்த நிலையில் தென்னாபிரிக்க அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 299 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் பிராங்ளின், ஓரம், விற்றோரி தலா 2 விக்கெட்டுக்களையும், மாட்டின், மில்ஸ், அஸ்ரில், ஸ்ரைரிஸ், ஆகியோர் தலா 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

248 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி எனக் களமிறங்கிய நியூஸிலாந்து அணி சார்பில் மார்ஷல் - புல்டன் ஜோடி களமிறங்கியது.

இந்த நிலையில் ஸ்கோர் 5 ஆக இருந்தபோது புல்டனின் விக்கெட் வீழ்த்தப்பட்டது.

4 ஓட்டங்களை மாத்திரமே பெற்ற புல்டன், என்ரினியின் பந்தை பௌச்



சரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய நியூஸிலாந்து அணி வீரர்கள் மோசமாக ஆடியதில் விக்கெட்டுக்கள் மளமளவென சரிய ஆரம்பித்தது.

இதில் மில்ஸ், பிளெமிங், ஸ்ரைரிஸ், அஸ்ரில், ஓரம் முறையே 0, 6, 2, 2, 2 என சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

ஸ்கோர் 28 ஆக இருந்தபோது நியூஸிலாந்து அணி 6 விக்கெட்டுக்களை இழந்திருந்தது.

இந்த நிலையில் ஆரம்ப துடுப்பாட்ட வீரராகக் களமிறங்கிய மார்ஷல் 25 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க நேரிட்டது.

85 பந்துகளில் 25 ஓட்டங்களைப் பெற்ற மார்ஷல், என் ரினியின் பந்தை பௌச்சரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய மக்கலம் 33 ஓட்டங்களுடனும், விற்றோரி 38 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தபோதும் ஓரளவு சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

பிராங்ளின் ஓட்டமெதையும் பெறாமல் ஆட்டமிழக்காதிருந்தார்.

இந்த நிலையில் நியூஸிலாந்து அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 120 ஓட்டங்களைப் பெற்று, 128 ஓட்டங்களால் தென்னாபிரிக்க அணியிடம் தோல்வியடைந்தது.

பந்துவீச்சில் என்ரினி, ஸ்ரெய்ன் தலா 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

## ரேக்கி கின்னை முதல் சுற்றில் பல்கலைக்கழக அணி வெற்றி

யாழ்ப்பாணம்

இலங்கை கிரிக்கெட் அணியின் 3 ஆம் பிரிவுப் போட்டியில் கலந்துகொள்ளும் யாழ்.மாவட்ட அணியை தெரிவுசெய்வதற்காக யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தால் பதிவுசெய்யப்பட்ட 13 விளையாட்டுக் கழகங்களிடையே நடத்தப்பட்டுவருகின்ற '50 ஓவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட லீக் முறையிலான முதலாம் சுற்று ஆட்டம் ஒன்றில் யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகத்தை 115 ஓட்டங்கள் வித்தியாசத்தில் யாழ்.பல்கலைக் கழக அணி வெற்றிகொண்டது.

யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இந்தப்போட்டியில் - முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.பல்கலைக் கழக அணி 50 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 248 ஓட்டங்களைக் குவித்தது.

இதில் மணிவண்ணன் 103, அருள்ராஜ் 46, கோபிநாத் 30, பந்துலன் 20 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஜொனியன்ஸ் அணி சார்பில் குமணன் மற்றும் காண்டீபன் ஆகியோர் தலா 2, லவேந்திரா, ரதீஸ், மயூரன் ஆகியோர் தலா 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் அணி 38 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 133 ஓட்டங்களை மட்டுமே பெற்றதால் பல்கலைக்கழக அணி அமோக வெற்றிபெற்றது.

ஜொனியன்ஸ் அணியின் சார்பில் நேசவர்மன் 40, மதன்ராஜ்18, மயூரன் ஆட்டமிழக்காமல் 16, அன்புஜன் 15, ரதீஸ் 10 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பல்கலைக்கழக அணி சார்பில் ரவி 3, செந்தூரன் 2, சர்வான் 2, அருள்ராஜ்,பந்துலன், ஜெயந்தன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர். (58)

## உதைபந்தாட்ட போட்டி!

யாழ்ப்பாணம்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அனுசரணையுடன் - அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டப் போட்டி - மனோகரா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றுவருகிறது.

இன்றைய ஆட்டத்தில் 3.30 மணிக்கு சுடரொளி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து, வல்வை விளையாட்டுக் கழகமும் - 4.30 மணிக்கு நடைபெறவுள்ள மற்றைய ஆட்டத்தில் கழுகுகள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து, அண்ணா சிலையடி விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

## கிரிக்கெட் சுற்றுக்கான விண்ணப்பம் கோரல்

சங்கானை

சங்கானை யூத் விளையாட்டுக் கழகம் நடத்தும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

7 பேர் பங்குபற்றும் 10 ஓவர்களைக் கொண்ட இந்தப் போட்டிக்குரிய விண்ணப்பங்களை - அனஸ் வீடியோ சங்கானை, கொம்பியூட்டர் வேர்ள்ட், 7 ஆம் கட்டை ஆகிய இடங்களில் பெற்று நாளை ஒப்படைக்கும்படி கேட்கப்பட்டுள்ளது. (47)

## விளையாட்டு

## வலைப்பந்தாட்டபோட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்

யாழ்.வலயமட்ட பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட பெண்களுக்கான வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டங்கள் கடந்த வாரம் யாழ் இந்து மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் 15 வயதுப்பிரிவில் 1 ஆம் இடத்தை திருக்குடும்ப கன்னியர்மடமும், 2 ஆம் இடத்தை யாழ்.இந்துமகளிர் கல்லூரியும், 3 ஆம் இடத்தை புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரியும் பெற்றன.

17 வயதுப் பிரிவில் முதலாம் இடத்தை வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையும், இரண்டாம் இடத்தை திருக்குடும்ப கன்னியர் மடமும், மூன்றாம் இடத்தை ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயமும் பெற்றன.

19 வயதுப்பிரிவில் 1 ஆம் இடத்தை சுண்டுக்குளி மகளிர் கல்லூரியும், 2 ஆம் இடத்தை யாழ்.இந்து மகளிர் கல்லூரியும், 3 ஆம் இடத்தை கொக்குவில் இந்துக் கல்லூரியும் பெற்றுக்கொண்டன. (12)

# எல்லா மனிதரின் வாழ்வுக்கும் ஆதாரமாக இருப்பது சேமிப்பு

## சமாதான நீதிவான் வன்னியசிங்கம்

நெல்லியடி —

ஒவ்வொரு மனிதனுடைய வாழ்வுக்கும் ஆதாரமாக இருப்பது சேமிப்புப் பழக்கம்தான். இத்தகைய சேமிப்புப் பழக்கம் மனிதனில் காணப்படுமாயின் அந்த மனிதனுடைய வாழ்வும், அந்த மனிதனில் தங்கிவாழும் ஏனையவர்களின் வாழ்வும் ஒளிமயமாக அமையும் என சமாதான நீதிவான் ஆ.வன்னியசிங்கம் தெரிவித்தார்.

புதுவருடத் தினத்தன்று கரவெட்டி திருவள்ளுவர் முன்பள்ளி நிலையத்தில் கைவிஷேட நிகழ்வும், சேமிப்புப் புத்தகம் வழங்கும் நிகழ்வும் நடைபெற்றபோது அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் -

இலங்கையில் இயங்கிவரும் பல வங்கிகளின் சேமிப்புத் திட்டங்கள் யாவும்வாடிக்கையாளர்களின் நன்மை கருதி அறிமுகம் செய்து வைக்கும் இந்த வேளையில் - சர்வோதய இயக்க அங்கத்தவர்களின் நலன் கருதி அங்கத்தவர் ஒருவர் இடருறும் காலத்தில் தோளோடு தோள் நின்று உதவி செய்வதற்காக இந்தச் சேமிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கு நாம் எமது வீண் செலவீனங்களைத் தவிர்த்து, எமது உழைப்பின் ஒரு பகுதியை எமது சேமிப்புக் கணக்கில் இடுவதன் மூலம் பாரிய நன்மைகளை அடைய வாய்ப்புண்டு.

இந்த வகையில் சர்வோதய இயக்கம் இன்று மக்களின் தேவையை அறிந்து மக்களுக்கான பல சிறப்பான சேவைகளைச் செய்ய முன்வந்ததையிட்டு அவர்கள் எமது கிராமத்துக்கு மக்களின் அத்தியாவசியத் தேவைகளில் ஒன்றாகிய 20 மலசலகூடம் அமைக்கும் திட்டம் ஒன்றையும், மேலும் இதில் சேமிப்புப் பழக்கத்தைக் கொண்டுள்ள 30 அங்கத்தவர்களுக்கு 20 ஆயிரம் ரூபா கடனுதவி வழங்கும் திட்டத்தையும் கொண்டு வந்துள்ளது.

இவ்வாறான சர்வோதய இயக்கத்தை வாழ்த்துவதோடு மக்களையும் அவர்கள் வழங்கும் திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் கூறினார்.

வட இலங்கை சர்வோதய இயக்கத்தின் அனுசரணையுடன் சுழற்சி முறையில் சுயமுயற்சிக்கான கடன் வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் இதன் முதற்கட்டமாக ஆயிரம் ரூபாவை வைப்பிலிட்ட தலா 30 அங்கத்தவர்களுக்கு புதுவருட கைவிஷேட பணத்துடன், சேமிப்புப் புத்தகத்தையும் திருவள்ளுவர் முன்பள்ளி நிலையத் தலைவர் சி.சுந்தரலிங்கம் வழங்கினார். (12)

## கரவெட்டியில் நடமாடும் சேவை

கரவெட்டி —

வடமராட்சிப் பிரதேச மக்களுக்கான காலங்கடந்த பிறப்பு, திருமணப் பதிவுச் சான்றிதழ் போன்றவற்றைப் பதிவதற்கான நடமாடும் சேவை இன்று காலை 9 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரை கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையில் வடவலய உதவிப் பதிவாளர் நாயகம், பருத்தித்துறை மேலதிக மாவட்டப் பதிவாளர் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். எனவே, பொதுமக்கள் தத்தமது பிரிவுக் கிராம அலுவலருடன் அல்லது சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுடன் தொடர்புகொண்டு மேலதிக விபரங்களைப் பெற்று, இன்றைய தினத்தில் பொருத்தமான ஆவணங்களுடன் வருகை தருமாறு பிரதேச செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.



யாழ்ப்பாணம் செலிங்கோ காப்புறுதி கம்பனியில் கணக்கு வைத்திருந்த வர்த்தகர் ஒருவரின் வியாபார நிலையத்தில் திருட்டுப் போனதை அடுத்து அந்த வர்த்தகருக்கு ஆறு லட்சத்து 48 ஆயிரத்து 92 ரூபா 92 சத காசோலையை யாழ்ப்பாண செலிங்கோ காப்புறுதிக் கம்பனியின் முகாமையாளர் எஸ்.தவசீலன் கையளிப்பதைக் காணலாம்.

# சின்னஞ்சிறு செய்திகள்

## நெல்லியடி மக்கள் வங்கி வாடிக்கையாளர்களுக்கு

நெல்லியடி —

நெல்லியடி மக்கள் வங்கிக் கிளையில் 01/09/2004 ஆம் ஆண்டு தொடக்கம் 31/12/2004 வரையான காலப்பகுதியில் அடகு பிடிக்கப்பட்டு மீட்கப்படாத நகைகள் எதிர்வரும் 31/05/2006 இல் ஏலத்தில் விடப்படவுள்ளன.

எனவே, நகைக்குரியவர்களை அதற்குரிய முழுவட்டியைச் செலுத்தி புதுப்பித்துக் கொள்ளுமாறும் அல்லது முழுப்பணத்தையும் செலுத்தி மீட்டுக் கொள்ளுமாறும் நெல்லியடி மக்கள் வங்கிக் கிளையின் முகாமையாளர் இ.சிவஞான சுந்தரம் பிள்ளை தெரிவித்துள்ளார். (12)

## மின் ஒழுக்கில் சிக்கி அவதியுறும் கால்நடைகள்

யாழ்ப்பாணம் —

யாழ். ஈச்சமோட்டைப் பகுதியில் மின்கம்பங்களில் ஏற்படும் மின் ஒழுக்கில் கால்நடைகள் சிக்கி அவதியுறுவதாக அந்த பகுதி மக்கள் தெரிவித்தனர்.

கடந்த வாரம் முதல் அடிக்கடி பெய்துவரும் மழையால் மின் கம்பங்களில் ஏற்படும் மின் ஒழுக்கில் சிக்கும் மாடுகளே இவ்வாறு அவதியுறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (58)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம் —

நீடோ தொண்டு நிறுவனம் ஓ.டி.டபிள்யு செயற்திட்டத்தின் கீழ் தரம் -9 மாணவர்களுக்கான விஞ்ஞானம், ஆங்கில பாடங்களுக்கான கருத்தரங்கு இன்று காலை 8.30 மணிக்கு சில்லாலை றோமன் கத்தோலிக்கப் பாடசாலையில் நடத்தவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் பங்குபற்றிப் பயன்பெறுமாறு நீடோ நிறுவனத்தின் யாழ். மாவட்ட அலுவலகம் மாணவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

## வனிதா வாசன சீட்டிழுப்பும் சுடுநீர் போத்தல் வழங்கலும்

நெல்லியடி —

நெல்லியடி மக்கள் வங்கிக் கிளையால் புதுவருடத்தினத்தன்று வனிதா வாசன சீட்டிழுப்பும், சுடுநீர்ப் போத்தல் வழங்கும் நிகழ்வும் நெல்லியடி மக்கள் வங்கி முகாமையாளர் இ.சிவஞானசுந்தரம்பிள்ளை தலைமையில் இடம்பெற்றது.

இதில் சிறப்பு விருந்தினர்களாக வட.பிரதேச பிரதி முகாமையாளர் சரஸ்வதி சிவன்அருள்சுந்தரம், விக்னேஸ்வராக் கல்லூரி அதிபர் சிவசிதம்பரம், கட்டைவேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்க முகாமையாளர் கொங்காதரன், தேவரையாளி இந்துக் கல்லூரி உப அதிபர் எஸ்.தவராஜா ஆகியோர் கலந்து கொண்டனர். நெல்லியடி மக்கள் வங்கியில் 20000ரூபா சேமிப்புச் சான்றிதழைப் பெற்ற வாடிக்கையாளர்கள் 96பேருக்கு சுடுநீர் போத்தல் வழங்கப்பட்டது. (12)

# தூவல் நீர்ப்பாசன பொறி பொருத்த குறைந்த வட்டியில் கடனுதவி

யாழ்ப்பாணம் —

யாழ். மாவட்டத்தில் தூவல் நீர்ப்பாசனத்தின் முக்கியத்துவம் கருதி விவசாயிகள் தூவல் நீர்ப்பாசன பொறிகளைப் பொருத்துவதற்கு குறைந்த வட்டி வீதத்தில் கடன் வசதிகளை வழங்குவதற்கு இலங்கை வங்கி நடவடிக்கை எடுத்துள்ளதாக வடமாகாண உதவிப் பொது முகாமையாளர் பீ.அருமைநாயகம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

இந்தக் கடன் திட்டத்தின் கீழ் ஆகக்கூடிய கடன் தொகையாக 50 ஆயிரம் ரூபா வரை வழங்கப்படும். இதனை இரண்டு வருட காலத்துக்குள் மீளச் செலுத்த வேண்டும். இதற்குப் பத்து சதவீத வட்டி அறவிடப்படும்.

இந்தக் கடன் திட்டத்தில் இணைய விரும்புபவர்கள் தமது பிரதேச விவசாய சம்மேளத் தலைவரின் சிபார்சுடன், இலங்கை வங்கியில் கணக்கு வைத்திருக்கும் இரண்டு விவசாயிகளின் பிணையுடன் இந்தக் கடனைப் பெறமுடியும்.

இந்தப் பொறிகளைப் பொருத்த விரும்பும் விவசாயிகள் தத்தம் பகுதிப் பெரும்பாக உத்தியோகத்தர்கள் ஊடாக யாழ். மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் க.சுந்தரேசனுடன் தொடர்புகொள்ளலாமெனவும் அவர் தெரிவித்தார்.

# படையினரின் பாதுகாப்பு வேலியால் மீன்பிடி பாதிப்பென மீனவர் கவலை

மானிப்பாய் —

வடமராட்சி வல்லைப்பாலத்தைச் சூழவுள்ள பரவைக் கடலில் பெரியளவில் வழமைக்கு மாறாக பாதுகாப்பு முட்கம்பி வேலிகளை அமைத்து இராணுவத்தினர் தமது பாதுகாப்பை பலப்படுத்தியிருப்பதால், கடந்த காலங்களில் அந்தப் பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்டு வந்த தொழிலாளர்கள் - தாம் காலங்காலமாகப் பெற்றுவந்த நாளாந்த வருவாயை இழந்துள்ளதாக கவலை தெரிவித்தனர்.

வல்லைப் பாலத்துக்கு அண்மையில் உள்ள பரவைக் கடலில் வலை வீசியும், கூண்டு அமைத்தும், தூண்டில் போட்டும் நாளாந்தம் கணிசமான அளவு இறால், நண்டு உட்பட்ட மீன் வகைகள் பிடிக்கப்பட்டு வந்தன.

கடந்த சில மாதகாலமாக வல்லைப் பாலத்தைச் சூழவுள்ள பகுதியில் பாதுகாப்பு வேலி நிறுவப்பட்டுப் பாதுகாக்கப்பட்டிருப்தோடு, பாலத்துக்கு இரண்டு பக்கமும் நிலத்தில் அமைக்கப்பட்டிருந்த இராணுவக் காவலரண்கள், சற்று உயர்த்தப்பட்டு காவல் கோபுரமாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

வல்லைப் பாலத்தைச் சுற்றிப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருப்பதால், அந்தப் பகுதியில் உள்ள பரவைக் கடலில் மீன் பிடிப்பது தற்போது தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

பரவைக்கடல் வற்றும் இந்தக் காலப்பகுதியில் கணிசமான அளவு இறால், நண்டு மற்றும் சிறிய மீன் வகைகள் காலையிலும், மாலையிலும் பிடிக்கப்படுவதுடன் - இந்தக் கடலில் பிடிக்கப்படும் கடல் உணவுப் பொருட்கள் ஆழ்கடல் மீன் வகையிலும் மாறுபட்ட சுவையுடையதாக இருப்பதால் இதனை மக்கள் விரும்பி வாங்குவதும் இங்கு குறிப்பிடத்தக்கது (100)

# நூற்றாண்டு விழாச்சபை அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம் —

புலமையாளர் அல்வாயூர் கவிஞர் மு.செல்லையாவின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு விழாச்சபை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இந்தச் சபையின் இணைச் செயலாளர்களாக யாழ்.பல்கலைக் கழக விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி, கொழும்பு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி மா.கருணாநிதி ஆகியோரும், இணைத் தலைவர்களாக சமாதான நீதிவான் மா.அனந்தராஜன், ஓய்வுபெற்ற அதிபர் செ.சதானந்தன் ஆகியோரும், பொருளாளராக சி.கணேசலிங்கம் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்த நூற்றாண்டு விழா சார்பாக அவருடைய ஆக்கங்கள் கொண்ட தொகுப்பொன்று வெளியிடவிருப்பதால், 1950 ஆண்டுக்கு முற்பட்ட காலப்பகுதியிலும் குறிப்பாக ஈழகேசரி, கலைச்செல்வி போன்றவற்றில் வெளிவந்த அன்னாருடைய கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள் உட்பட ஏதாவது ஆக்கங்கள் வைத்திருப்பவர்கள் மா.அனந்தராஜன், தெய்வீகம், மனோகரா, அல்வாய் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு நூற்றாண்டு விழாச்சபையினர் கேட்டுள்ளனர். (12)

# சமாதான நீதிவான் பதவியை தவறாக பயன்படுத்தினால் தண்டனை

## உயர் நீதிமன்ற நீதிபதி எச்சரிக்கை

பன்னாலை —

சமாதான நீதிவான் பதவியைத் தவறான வழியில் பயன்படுத்தினால் நீதிமன்றத்தால் அந்தப் பதவியை வகிப்போர் தண்டிக்கப்படுவரென உயர் நீதிமன்ற நீதிபதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

இளவாலை வடக்கு மயிலங்கூடலைச் சேர்ந்த செல்லத்துரை பத்திநாதர் இலங்கை முழுவதற்குமான சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டதையிட்டு அந்த ஊர் மக்களால் அவருக்குப் பாராட்டு விழா நடத்தப்பட்டது.

இந்த நிகழ்வுக்குத் தலைமை தாங்கி உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தனதுரையில் மேலும் தெரிவித்ததாவது -

இந்த சமாதான நீதிவான் பதவி நீதி அமைச்சால் வழங்கப்பட்டு வருகிறது. இவர்கள் ஆயுட்காலம் முழுவதும் சமாதான நீதிவான் பதவியில் இருக்கலாம். இவர்கள் பற்றிய சகல விபரங்களும் வழங்கப்பட்டு இவர்கள் இந்த பதவிக்கு தகுதியுடையவர்களா என ஆராய்ந்து இது வழங்கப்பட்டு வருகிறது.

சமாதான நீதிவான் பதவி இரண்டு பரிணாமங்களைக் கொண்டது. ஒன்று மாவட்டத்துக்கு மட்டும். இரண்டாவது இலங்கை முழுவதும் சேவைகளைச் செய்யக்கூடியது. காசோலைகள், காணிகள் சம்பந்தமான மற்றும் வேறு வழக்குகளில் இவர்களின் வாக்குமூலம் பெறப்படுகின்றன.

பிறப்பு, இறப்பு அத்தாட்சிப் பத்திரம், பரீட்சைகள் போன்றவற்றுக்கு கையெழுத்திடுவதற்கு இவர்களுக்கு அதிகாரம் உண்டு. சத்தியக்கூற்றுக்களில் முறையான தகவல்களைத் தெரிவிக்க வேண்டும். இல்லையெனில்நீதிமன்றத்தால் தண்டனைக்குள்ளாக்கப்படுவர் எனத் தெரிவித்தார். (72)

# வேலையற்ற இளைஞர் யுவதிகளின் விபரங்கள் திரட்டும் தகவல் மையம்

யாழ்ப்பாணம் —

யாழ். குடாநாட்டிலுள்ள வேலையற்ற இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பைப் பெற்றுக்கொடுக்கும் நோக்குடன் இளைஞர் தகவல் நிலையம் இளைஞர், யுவதிகளின் விபரங்களைத் திரட்டி வருகிறது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் வடமாகாணத்தில் யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய இடங்களில் இரு இளைஞர் தகவல் மையங்களை அண்மையில் திறந்து வைத்துள்ளது.

இந்த தகவல் மையத்தால் வேலையற்ற இளைஞர், யுவதிகளுக்கு தொழிற் பயிற்சி வழங்கக்கூடிய தனியார் நிறுவனங்களை இனங்கண்டு பயிற்சி வழங்குதல், தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல், இளைஞர்- யுவதிகளுக்கு தொழில் வழி காட்டல், உளவள ஆலோசனைகள் வழங்கல், மாவட்ட மட்டத்தில் கலை மற்றும் விளையாட்டுத்துறை சார்ந்த குழுக்களை அமைத்தல் போன்ற இளைஞர், யுவதிகளின் நலன் சார்ந்த பல்வேறு திட்டங்கள் செயற்படுத்தப் படவுள்ளதாக நிலையத்தின் பொறுப்பதிகாரியான மாவட்ட இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர் ஆ.சக்திவேல் தெரிவித்தார்.

இளைஞர், யுவதிகள் யாழ். செயலகத்துக்கு அண்மையிலுள்ள தேசிய வீடமைப்பு அதிகாரசபை கட்டடத்துக்கு அருகில் உள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் விண்ணப்ப படிவங்களை பெற்று, தமது விபரங்களை சமர்ப்பிக்கலாம். இவ்வாறு விண்ணப்பங்களை சமர்ப்பிப்பவர்களுக்கு தனியார் நிறுவனங்களில் அவர்களுக்குப் பொருத்தமான வேலைவாய்ப்புக்களை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார். (ரி)

### சுயாதீன ஆணைக்குழு நியமனம்

# ஜனாதிபதி மகிந்தவுக்கு எதிராக வழக்குத் தொடர ஐ.தே.க முடிவு

கொழும்பு —

அரசியல் யாப்புக்கு எதிராக சுயாதீன குழுக்களை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நியமித்ததை எதிர்த்து ஐக்கிய தேசியக் கட்சி வழக்குத் தொடரவுள்ளது.

பொலிஸ் மற்றும் பொதுச்சேவைகள் ஆகியவற்றுக்கான ஆணைக் குழுக்களை அண்மையில் ஜனாதிபதி மகிந்த அறிவித்திருந்தார்.

அரசியல் யாப்பின் 17 ஆவது திருத்தத்துக்கமைய அரசியல் யாப்பு சபைதான் இத்தகைய நியமனங்களை மேற்கொள்ளமுடியும். ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்கள் மூலமாக இந்தக் குழுக்களை நியமிக்க முடியாது.

இது தென்னிலங்கை அரசியலில் சர்ச்சையை ஏற்படுத்தி வருகிறது.

இந்த நிலையில் ஜனாதிபதி மகிந்தவின் இந்த நியமனங்களை எதிர்த்து வழக்குத் தொடரவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய தெரிவித்தார்.

கடந்த வாரம் கூட்டப்பட்ட அனைத்துக் கட்சி கூட்டத்திலும் இது தொடர்பாக ஐ.தே.கவின் அதிருப்தியைத் தெரிவித்துள்ளோம். ஜனாதிபதியின் இந்தச் செயற்பாடு ஏற்றுக்கொள்ளமுடியாது என்றும் கரு ஜெயசூரிய கூறினார்.

பல்வேறு மனித உரிமை ஆர்வலர்களும் அமைப்புக்களும் ஜனாதிபதி மகிந்தவின் இந்த நியமனங்களைக் கடுமையாக விமர்சனம் செய்துள்ளன.

ஆனால், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் செயற்பாடு நியாயமானது தான் என்று அரசியல் யாப்பு விவகாரங்களுக்கான அமைச்சர் டியூ குணசேகர கூறியுள்ளார்.

இதனிடையே மகிந்தவின் இந்த நியமனங்களை எதிர்த்து பொது அமைப்பு ஒன்று வழக்குத் தொடர்ந்துள்ளது.

பொதுமக்கள் அமைப்பு சார்பில் ஏ.சி.விஸ்வலிங்கம் மற்றும் சுசில் சிறிவர்த்தன ஆகியோர் இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளனர்.

மேலும் மாற்றுக் கொள்கைகளுக்கான மையமும் ஜனாதிபதி மகிந்தவின் நியமனத்தை மிகக் கடுமையாக விமர்சனம் செய்துள்ளது.

அரசியல் யாப்பை மீறும் செயற்பாட்டை நியாயப்படுத்துவதை ஏற்க முடியாது என்றும் அந்த அமைப்பு கூறியுள்ளது.

# 2 ஆம் சுற்று பேச்சுகள் நடக்கும்

### என்கிறார் அனுர பிரியதர்சன யாப்பா

கொழும்பு —

ஜெனிவாவில் எதிர்வரும் 24 ஆம் திகதி இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தை நடைபெறும் என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அரசாங்கப் பேச்சாளரும் அமைச்சருமான அனுர பிரியதர்சன யாப்ப கூறியதாவது -

ஜெனிவாப் பேச்சுக்கள் 24 ஆம் திகதி நடைபெறும். எதிர்வரும் 22 ஆம் திகதி அரசாங்கக் குழுவினர் ஜெனிவா புறப்பட்டுச் செல்ல திட்டமிட்டுள்ளனர்.

தற்போதைய முட்டுக்கட்டைகளுக்குத் தீர்வு காணப்பட்டு திட்டமிடப்பட்ட நாளில் ஜெனிவா பேச்சுக்கள் நடைபெறும் என்று அரசாங்கம் நம்பிக்கையோடு உள்ளது எனத் தெரிவித்தார்.

## கிளைமோர் மீட்பு

திருகோணமலை —

திருகோணமலை - அநுராதபுரம் வீதியில் கன்னியாவில் மரமொன்றில் பொருத்தப்பட்டிருந்த கிளைமோர் குண்டு ஒன்று இராணுவத்தினரால் மீட்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் காலை 10 மணியளவில் வீதிப்பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் இதனைக் கண்டுபிடித்தனர்.

சம்பவ இடத்துக்கு இராணுவ வெடிகுண்டு செயலிழக்க வைக்கும் பிரிவினர் வரவழைக்கப்பட்டு கிளைமோர் குண்டு செயலிழக்க வைக்கப்பட்டதாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. (10,4)

# வெடி மருந்துகளுடன் கற்பிட்டியில் இருவர் கைது

கொழும்பு —

புத்தளம் - கற்பிட்டிப் பிரதேசத்தில் வெடிமருந்துகளுடன் இருவர் கைது செய்யப்பட்டனர்.

கடற்படையினருக்குக் கிடைத்த தகவலையடுத்து கற்பிட்டி - மாதல் வாடியில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது 550 கிராம் வெடிமருந்து, கைக்குண்டின் சிறு பாகம் மற்றும் வாள் என்பன கைப்பற்றப்பட்டன.

இது தொடர்பாக இருவர் சந்தேகத்தின் பேரில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கைப்பற்றப்பட்ட வெடிமருந்துகள் மிகவும் சக்தி வாய்ந்தவை எனச் சந்தேகிக்கப்படுகின்றன.

இந்த வெடிமருந்துகள் இரசாயன பகுப்பாய்வுக்கென அனுப்பப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட இருவரும் கைப்பற்றப்பட்ட பொருட்களுடன் மேலதிக விசாரணைகளுக்காக கற்பிட்டி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

### கிழக்கு மாகாண தளபதிகளின் பயணத்துக்கு

# இந்திய டெக்கான் நிறுவனத்தின் ஹெலியை பயன்படுத்த திட்டம்!

கொழும்பு —

விடுதலைப்புலிகளின் கிழக்கு மாகாண தளபதிகளின் கிளிநொச்சி பயணத்துக்கு இந்தியாவின் டெக்கான் ஏயார் நிறுவனத்தின் ஹெலி ஏற்பாடு செய்யப்படுவதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

டெக்கான் ஏயார் நிறுவனத்துடன் அமைச்சர் ரோஹித போகொல்லாகம இது தொடர்பாக நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஆலோசனை நடத்தினார். நோர்வே தூதரகத்துக்கு தமது ஹெலியை வாடகைக்கு அளிக்க அந்த நிறுவனமும் ஒப்புதல் தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பிலிருந்து ஒருங்கு விடுதலைப் புலிகளின் தளபதிகளை இந்த ஹெலியில் நோர்வேத் தரப்பினர் அழைத்து வரத் திட்டமிடப்பட்டுள்ளது.

இருப்பினும் தனியார் விமான சேவையைப் பயன்படுத்துவது தொடர்பாக விடுதலைப் புலிகள் தரப்பினர் எதுவித நிலைப்பாட்டும் மேற்கொள்ளவில்லை என்றும், இன்று நோர்வே சிறப்புத் தூதுவர் கிளிநொச்சி வருகை தரும்போது இதுபற்றி விவாதிக்கப்படும் என்றும் தகவல்கள் தெரிவித்தன.

# சமாதான முயற்சிகளின் ஈடுபாட்டை புலிகள் வெளிப்படுத்த தவறிவிட்டனர்

### அமைச்சர் ரம்புக்வெல தெரிவிப்பு



கொழும்பு —

சமாதான முயற்சிகளின் ஈடுபாட்டை கடந்த இரு வாரங்களாக விடுதலைப் புலிகள் வெளிப்படுத்தத் தவறிவிட்டனர் என்று அமைச்சர் கெகலிய ரம்புக்வெல குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் கூறியுள்ளதாவது -

விடுதலைப் புலிகளின் புதிய நிபந்தனைகள் தொடர்பாக நாம் கவலை கொள்கிறோம். இவை நாட்டினது இறையாண்மை அல்லது ஒற்றையாட்சித் தன்மையை முடக்குவதாகும்.

கடந்த இருவாரங்களாக அமைதி முயற்சிகளில் உள்ள ஈடுபாட்டை வெளிப்படுத்த விடுதலைப் புலிகள் தவறிவிட்டனர். இருப்பினும் ஜெனிவா பேச்சுக்களிலிருந்து விடுதலைப் புலிகள் விலகமாட்டார்கள்.

எவரும் யுத்தத்துக்கு இப்போது தயாராக இல்லை. திருகோணமலை நிலைமை இப்போது மிகவும் மோசமாக இல்லை. விடுதலைப் புலிகளும் பேச்சுக்களில் பங்கேற்க விரும்புகின்றனர்.

அமைதி முயற்சிகளைக் கட்டியெழுப்ப இணைத் தலைமை நாடுகள் மற்றும் அரசியல் கட்சிகளுடன் அரசாங்கம் ஆலோசனை நடத்தி வருகிறது.

துணை இராணுவக் குழுவினரது ஆயுதங்கள் களையப்படவில்லை என்று விடுதலைப் புலிகள் குற்றம் சாட்டுகின்றனர். சமாதான முயற்சிகளின்போது இத்தகைய குற்றச்சாட்டுக்களும் எதிர்க் குற்றச்சாட்டுக்களும் வழமையானதே. இது ஒரு உத்திதான் என அவர் மேலும் தெரிவித்தார்.

# ஜெனிவா இணக்கப்பாட்டை நடைமுறைப்படுத்த வேண்டும்

### அரசு-புலிகளுக்கு அவுஸ்ரேலியா வேண்டுகோள்

கொழும்பு —

ஜெனிவா பேச்சுக்களில் எட்டப்பட்ட இணக்கப்பாட்டை அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் மதித்து -போர் நிறுத்தத்தைப் பலப்படுத்த வேண்டும் என அவுஸ்ரேலிய அரசாங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

கொழும்பிலுள்ள அவுஸ்ரேலிய தூதரகம் நேற்றுமுன்தினம் வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

இலங்கையின் வடக்கு - கிழக்கில் அரச படைகள் மற்றும் பொதுமக்கள் மீதான அண்மைய வன்முறைகளை அவுஸ்ரேலிய அரசாங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது.

அதேநேரத்தில் திருகோணமலையில் தமிழ் அரசியல் பிரமுகர் வ.விக்னேஸ்வரன் கடந்த ஏப்ரல் 7 ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டதையும் அவுஸ்ரேலிய அரசாங்கம் கண்டிக்கிறது.

இலங்கை அரசாங்கம் பதில் தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் பேச்சுக்கள் மூலமான தீர்வு காண தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

ஜெனிவாவில் பெப்ரவரி 22 மற்றும் 23 ஆம் திகதிகளில் நடத்தப்பட்ட பேச்சுக்களின் முடிவில் எட்டப்பட்ட உடன்பாட்டை அரசாங்கமும் தமிழீழ விடுதலை புலிகளும் மதித்து போர் நிறுத்தத்தைப் பலப்படுத்தி அனைத்து தரப்பு நம்பிக்கையையும் கட்டியெழுப்ப வேண்டும் என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முட்டுக்கட்டை நீக்கம் குறித்து இந்தியத் தூதுவரும் பேச்சு!



கொழும்பு —

இந்திய தூதுவர் நிருபமா ராவ் கடந்த திங்கட்கிழமை அரசாங்க சமாதான செயலகப் பணிப்பாளர் கலாநிதி பாலித கொகன்னவைச் சந்தித்து சுமார் ஒரு மணிநேரம் பேச்சு நடத்தினார்.

தற்போது எழுந்துள்ள ஜெனிவா பேச்சுக்கான முட்டுக்கட்டையைக் களைவது தொடர்பாகவே இவர்கள் இருவரும் கலந்துரையாடியதாக தெரியவருகிறது.

இதனையடுத்து கடந்த திங்கட்கிழமை மாலை சமாதான செயலகப் பணிப்பாளரும் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவரும் மீண்டும் சந்தித்துப் பேச்சுக்களில் ஈடுபட்டனர். இந்தப் பேச்சுக்கள் மாலை ஆறு மணிக்கு பின்னரும் நீடித்தது.

அதேவேளை, படைத்தரப்பின் தலையீடின்றிக் கடல் வழியாக அல்லது விமான மார்க்கமான புலிகளின் பயணத்துக்கான வசதிகளைச் செய்து கொடுப்பது தொடர்பாக அரசு உத்தியோகபூர்வமான அறிவிப்பை விரைவில் வெளியிடும் என கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

# ஐ.நா மனித உரிமைக் குழுவில் இலங்கையை சேர்க்க எதிர்ப்பு

கொழும்பு —

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கையைச் சேர்க்க ஆசிய மனித உரிமைகள் ஆணையம் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

ஹொங்கொங்கை தலைமையிடமாகக் கொண்டு செயற்படும் அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் -

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் குழு உறுப்பினராக இணைவதற்கு அண்மையில் இலங்கை அரசாங்கம் விண்ணப்பித்துள்ளது.

ஆசிய நாடுகளில் இடம்பெற்றுள்ள மூன்று நாடுகளில் இலங்கையில் மட்டுமே மனித உரிமைகள் மீறப்பட்டு வரும் நிலையில் அந்த நாட்டை தெரிவு செய்யக்கூடாது.

இலங்கையின் மனித உரிமை மீறல்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் பகிரங்கமாக விமர்சனம் செய்துள்ளது.

ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழு கடந்த நவம்பர் 2003 ஆம் ஆண்டு பரிந்துரைத்த எதனையுமே அரசாங்கம் செய்யவில்லை. அதேபோல 2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சித்திரவதைகள் தொடர்பான குழுவின் ஆய்வறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டதையும் அரசாங்கம் நடைமுறைப்படுத்தவில்லை.

பொலிஸ், நீதித்துறை அனைத்துமே விமர்சனத்துக்குரிய வகையில் மோசமான செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன. இலங்கையில்தான் காணாமல் போவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

ஆகையால் இலங்கையை ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் சேர்த்துக் கொள்ளக்கூடாது என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# சமாதான முயற்சிகள் தாமதம்; வெளிநாட்டு முதலீட்டாளர் அச்சம்!

கொழும்பு —

இலங்கையில் சமாதான முயற்சிகள் தாமதவடைவதால் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அச்சமடைந்துள்ளனர்.

இலங்கையின் தற்போதைய நிலைமைகள் குறித்து வெளிநாட்டு முதலீட்டாளர்கள் திருப்தியடையவில்லை. வெளிநாட்டு முதலீடுகளைக் கவருவதற்கு அமைதியான சூழ்நிலை உருவாக வேண்டும் என்று பங்கு வர்த்தக ஆய்வாளர் ஜயனி அமரசிங்க தெரிவித்தார்.

அமைதி முயற்சிகளில் அர்ப்பணிப்பு இருக்க வேண்டும் என்று வெளிநாட்டு முதலீட்டாளர்கள் எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினார்.

பல வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு முதலீட்டாளர்களும் நிலைமையை பொறுத்திருந்து பார்த்த பின்பு முதலீடு செய்யும் நிலையில் இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# விருப்புடன் ஓய்வு பெறும் திட்டம் நடைமுறைக்கு!

கொழும்பு —

அரச செலவினங்களை குறைக்கும் வகையிலும், உற்பத்தியை அதிகரிக்கும் வகையிலும் அரசாங்க ஊழியர்கள் விருப்பத்துடன் ஓய்வு பெற்றுச் செல்லும் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இந்த நடைமுறைக்கு உலக வங்கியும் ஆதரவு தெரிவித்துள்ளதாக நிதி அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அண்மையில் பட்டதாரிகளை பெருமளவில் அரச சேவையில் இணைத்துக் கொண்டதன் மூலம் அரச அரச சேவையில் ஊழியர் தொகை பெருமளவில் அதிகரித்துள்ளது. கடந்த வருடத்தின் மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கையில் பத்து லட்சத்து 94 ஆயிரத்து 415 பேர் அரச சேவையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் படி 18 வீதமான உழைப்பாளர் படை அரச சேவையில் உள்ளது.

# முதலாம் தவணை முடிவடைந்தும் பாடநூல்கள் வழங்கப்படவில்லை

உடுவில் —

பாடசாலைகள் ஆரம்பித்து முதலாம் தவணை முடிவடைந்து விட்ட போதிலும், இதுவரை இலவச பாடநூல்கள் முழுமையாகக் கிடைக்கவில்லை என மாணவர்கள் கவலை தெரிவித்தனர்.

இது சம்பந்தமாகப் பல தடவைகள் கோட்டக் கல்வி அதிகாரிகள் - கல்வி வெளியீட்டு திணைக்களத்துக்கு அறிவித்தும் அவர்கள் பாராமுகமாக இருப்பதாகக் கல்வி அதிகாரிகள் தெரிவித்தனர்.

சில பாடசாலைகளில், பாடசாலைக்கென வழங்கப்பட்ட மாதிரி புத்தகம் ஒன்றை வைத்துக் கொண்டே ஆசிரியர்கள் கல்வி கற்பிப்பதாகவும், வேறு சில பாடசாலைகளில் பழைய பாடத்திட்ட புத்தகங்களையே உபயோகிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால், சில வசதியுடைய பாடசாலைகளில் புத்தகத்தைப் போட்டோ பிரதி எடுத்தும் கற்பித்தலில் ஈடுபடுகின்றனர். இதனால் பெற்றோர் பெரும் பணச் சுமையை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக 3 ஆம் தரத்துக்கான கணிதபாட நூல், 6,7ஆம் தரத்துக்கான கணிதம், தமிழ் என்பனவும் 8 ஆம் தரத்துக்கான தமிழ், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், குடியுரிமைக்கல்வி ஆகிய பாட நூல்கள் வந்து சேரவில்லை. இரண்டு தடவைகள் இலவச பாட நூல்களை அனுப்பியிருந்த போதிலும் முழுமையாக இன்னமும் வந்து சேரவில்லை என கல்வி அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (101)

# மக்களின் வாழ்வை வளப்படுத்துவதற்கு

# குடும்ப புனர்வாழ்வு நிலையம் உதவவேண்டும்

## மாவட்ட வைத்திய அதிகாரி கதிரவேற்பிள்ளை தெரிவிப்பு

நெல்லியடி —

வடமராட்சி, தென்மராட்சிப் பிரதேசங்களுக்கான குடும்பப் புனர்வாழ்வு நிலையம் இந்தப் பிரதேசங்களில் யுத்தத்தாலும், சுனாமியாலும் பாதிக்கப்பட்டு இன்னல்களை அனுபவித்துவரும் மக்களின் வாழ்வை வளம்படுத்தக் கூடிய சேவைகளை வழங்க வேண்டும்

இவ்வாறு வடமராட்சி, தென்மராட்சி பிரதேசங்களுக்கான குடும்பப் புனர்வாழ்வு நிலைய உப அலுவலகத்திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு அலுவலகத்தைச் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்து உரையாற்றிய பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி எஸ். கதிரவேற்பிள்ளை தெரிவித்தார்.

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு முன்புறமாக உள்ள மாடிக்கட்டிடத்தில் இந்த அலுவலகம் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இளைப்பாறிய உள்ளூராட்சித் சேவை நூலகர், ஏ.என்.எஸ் திருச்செல்வம் தலைமையில் திறப்பு விழா நிகழ்வு நடைபெற்றது.

விழாவைப் பருத்தித்துறை பிரதேச சபைச் செயலாளர் எஸ்.பசுபதி மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார். பருத்தித்துறைப் பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன் அலுவலகப் பெயர்ப்பலகையைத் திரை நீக்கம் செய்து வைத்தார்.

தொடர்ந்து உரையாற்றிய மாவட்ட வைத்திய அதிகாரி -

இந்தப் பிரதேசங்களின் மக்கள் யுத்தத்தாலும், சுனாமியாலும் பல்வேறு வகைகளிலும் பாதிக்கப்பட்டு, சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருகின்றனர். இவர்களுக்கு இன்றுவரை போதிய உதவிகள் வழங்கப்படவில்லை.

இந்த நிலையில் வடமராட்சி, தென்மராட்சிப் பிரதேசங்களுக்கான குடும்பப் புனர்வாழ்வு நிலையம் திறந்து வைக்கப்படுவது மிக மகிழ்ச்சிக்குரியதாகும்.

இந்தக்குடும்ப வாழ்வு நிலையம் இன்னல்களை அனுபவித்து வரும் மக்களுக்குப் பல்வேறு வகையான உதவிகளை வழங்க முடியும். பாதிக்கப்பட்ட மக்களை இனங்கண்டு அவர்களுக்கு வேண்டிய உதவிகளை வழங்கி அவர்களின் வாழ்வை வளம்படுத்தத் தவறக்கூடாது.

சுனாமியின் போது பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு பாதிக்கப்பட்டவர்களுக்கான மருந்து வகைகளுடன் வருகை தந்த முதல் நிறுவனம் குடும்பப் புனர்வாழ்வு நிலையம் என்பதைப் பெருமையுடன் கூறமுடியும்.

குடும்பப் புனர்வாழ்வு நிலையத்தின் மாவட்ட இணைப்பாளர் சிதம்பரநாதன் சுமார் 1 1/2 லட்சம் ரூபா பெறுமதியான மருத்துப் பொருட்களுடன் வந்து, அவற்றை என்னிடம் கையளித்திருந்ததை மறந்து விடமுடியாது. அந்தவேளையிலே பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு அந்த மருந்துப் பொருட்கள் மிக இன்றியமையாததாகவே இருந்தன. குடும்பப் புனர்வாழ்வு நிலையம் மருந்துப் பொருட்களை வழங்கிய பின்னரே ஏனைய நிறுவனங்கள் வைத்தியசாலைக்கு வரத் தொடங்கின.

குடும்பப் புனர்வாழ்வு நிலையம் யுனிசெவ் நிறுவனத்துடன் இணைந்து, மிதிவெடிப் பாதிப்புக்கான திட்டங்களையும் நடைமுறைப்படுத்தியுள்ளது. சிறைகளில் துன்புறுத்தப்பட்டு, அவலங்களை அனுபவித்த மக்களின் வாழ்வையும், குடும்பத் தலைவர்களை இழந்து கண்ணீரும், கம்பலையுமாகத் தவிக்கும் குடும்பங்களின் வாழ்வை வளம்படுத்தவும் குடும்பப் புனர்வாழ்வு நிலையம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இந்த நடவடிக் கைகள் இன்றைய காலகட்டத்துக்கு மிக இன்றியமையாததான பேருதவியாக அமைந்துள்ளது.

இந்தக் குடும்பப் புனர்வாழ்வு நிலையம் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு மிக அருகாமையில் திறந்துவைக்கப்பட்டிருப்பது மிகப் பொருத்தமானதாகும். இந்த நிலையத்தின் சேவைகளில் வைத்திய சுகாதார சேவைகள் மிக முக் கியத்துவம் பெறுகின்றன.

தென்மராட்சி - வடமராட்சிப் பிரதேசங்களில் யுத்தத்தாலும், சுனாமியாலும் பாதிக்கப்பட்டு, இன்னல்களை அனுபவித்து வரும் மக்களுக்கு இந்த அலுவலகம் சிறந்த சேவைகளை வழங்க அனைவரும் பூரண ஒத்துழைப்புகளை வழங்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (12)

# கணித பாடத்தில் சித்தியடையும் வீதத்தை அதிகரிக்க விசேட திட்டம்

திருகோணமலை —

வடக்கு - கிழக்கு மாகாண பாடசாலைகளிலிருந்து இந்த வருடம் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் கணித பாடத்தில் சித்தியடையும் வீதத்தை அதிகரிக்கும் நோக்குடன், விசேட செயற்திட்டமொன்று அமுல்படுத்தப் படவுள்ளதாக மாகாண கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் வி.இராசையா மேலும் தெரிவித்ததாவது -

க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில் ஏனைய பாடங்களில் மாணவர்கள் சுலபமாக சித்தியடைகின்ற போதிலும், கணித பாடத்தில் சித்தியடையத் தவறுவதால் உயர்கல்விக்கான வாய்ப்பை இழப்பதுடன் வேலை வாய்ப்புக்கான அடிப்படைத் தகைமைகளையும் இழக்கின்றனர்.

இந்த நிலைமையை மாற்றியமைக்கும் நோக்குடன் வடக்கு - கிழக்கு மாகாணத்தின் 24 கல்வி வலயங்களிலும், இந்தத் திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

கடந்த வருடம் தரம் 10 மூன்றாம் தவணைப் பரீட்சையில் கணித பாடத்தில் குறைந்த புள்ளிகளைப் பெற்ற மணவர்கள் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கு உதவுவதன் மூலம் சாதாரண தரப் பரீட்சையில், அவர்களை சித்தியடையச் செய்வதே இந்தத் திட்டத்தின் நோக்கமெனவும் அவர் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

கொழும்பு —

வடக்கு - கிழக்கு உட்பட நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலும் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் நிலவும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகக் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் டி.டி. வணிகநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு - தமிழ், சிங்கள மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் போட்டிப் பரீட்சை நடத்தப்படவுள்ளது.

போட்டிப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையிலும், நேர்முகப் பரீட்சை அடிப்படையிலும் தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் கொழும்பு 07 இல் அமைந்துள்ள கமநல அபிவிருத்தித் திணைக்களத்துக்கு அனுப்பிவைக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் மொழி, கணிதம், விஞ்ஞானம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன், அங்கீகரிக்கப்பட்ட அரச நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட பொறியியல் தொழில்நுட்ப டிப்ளோமா சான்றிதழையும் விண்ணப்பதாரிகள் பெற்றிருக்க வேண்டும்.

அதேவேளை, வடக்கு - கிழக்கு மாகாணத்திலேயே தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்கான வெற்றிடங்கள் அதிகளவில் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# அவசர கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் —


திருகோணமலை மாவட்டத்தில் கடமையாற்றி புதுவருட விடுமுறையில் வந்து அசாதாரண சூழ்நிலை காரணமாகத் தற்போது யாழ். மாவட்டத்தில் தங்கியுள்ள அனைத்து அரச ஊழியர்களும் மீண்டும் வேலைக்குத் திரும்புவது தொடர்பாகக் கலந்துரையாடவுள்ளதால் அனைத்து அரச ஊழியர்களையும் இன்று காலை 11 மணிக்கு ஆரியகுளம் புதிய உயர் கல்லூரியில் ஒன்று கூடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

# நிகழ்வுகளின் நிழல்கள்...





சில்லாலை கதிரை மாதா ஆலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற "உயிர்த்த ஞாயிறு" திருவிழா திருப்பலியில் ஆலய பங்குத் தந்தை அருட்தந்தை யூட் நிக்சன் திருப்பலி ஒப்புக்கொடுப்பதையும் - உயிர்த்த ஆண்டவரின் திருச் சொரூபம் பவனியாக எடுத்துச் செல்லப்படுவதையும் படத்தில் காணலாம். (சில்லை தாஸ்)



அண்ணாவி ஆர்.ஜீ.கிறிஸ்தோப்பரின் "உதிரத்து இராகங்கள்" இறுவட்டை அருட்தந்தை ம.இ.பயஸ் அடிகள் வெளியிட்டு வைக்க முதல் சுவடியை ஆயரின் முன்னாள் செயலாளர் அருட்பணி செல்வராஜா அடிகளார் பெற்றுக் கொள்வதையும், அருகே அண்ணாவியார் நிற்பதையும் படத்தில் காணலாம். (206)



நெடுந்தீவு சீக்கிரியாம் பள்ளம் அ.த.க.வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு நிகழ்வின்போது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட நெடுந்தீவுக் கோட்டக் கல்வி அதிகாரி க.அரசரத்தினத்தை வித்தியாலய அதிபர் கெ.அன்ரன் மரியதாஸ் அழைத்து வருவதையும், அருகில் நெடுந்தீவுப் பிரதேச கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரையும் படத்தில் காணலாம். (113)

# விடுதலையின் விளிம்பிலுள்ள தமிழீழ விடுதலைப் போராட்டம்



மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் முகுந்தன்

கிளிநொச்சி—

தமிழர்களை அழிக்கவேண்டும் என்ற சிந்தனை சிங்கள அரசிடம் தொடர்ந்தும் அழியாத சிந்தனையாகக் காணப்படுகிறது என தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் செ.முகுந்தன் தெரிவித்தார்.

தமிழர் புனர்வாழ்வுக் கழக நடுவப் பணியகத்தில் நடைபெற்ற அன்னைபூபதியின் நினைவு நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - சிங்கள அரசு அன்று முதல் இன்று வரையில் சிந்தனையிலோ, செயற்பாட்டிலோ எந்தவித மாற்றத்தையும் ஏற்படுத்தாமலே செயற்பட்டு வருகிறது.

இதன் அடிப்படையிலேயே திருகோணமலையில் அப்பாவித் தமிழ் மக்கள் மீதான வன்முறைத்தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர்.

தமிழ்த் தேசியப் பற்றாளர்களும், தமிழீழத்துக்காக உழைப்பவர்களும் கடத்தப்படுவதும், கொல்லப்படுவதும் வெளிப்படையான ஒன்றாகவே இருக்கின்றது.

அவர்கள் மிகவும் மனித பண்புகளில் இருந்து மாறுபட்டு, அப்பாற்பட்டு நிற்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

இன்றைய நவீன உலகம் ஜனநாயகம் உள்ள, மனிதாபிமானமுள்ள சமூகமாக மாறிவருகின்ற அதே வேளை சிங்கள தேசம் மட்டும் காட்டுமிராண்டித்தனமான கொள்கையுடன் செயற்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் தமிழீழ விடுதலைப் போராட்டம் விடுதலையை எட்டுவதற்கான விளிம்பில் நிற்கின்ற சூழலில் தமிழ் மக்கள் போராட்டத்துக்கான பல்வேறு வகையிலான அர்ப்பணிப்புக்களை மேற்கொண்டு செயற்பட்டு வருகின்றனர்.

கடந்த நான்கு ஆண்டுகளாக நடைமுறையில் உள்ள சமாதானம் எனப்படுகின்ற காலகட்டத்தில் நாங்கள் பல்வேறுபட்ட இழப்புகளைச் சந்தித்திருக்கின்றோம்.

சமாதானத் தீர்வு ஒன்றை எட்டுவதென்பது போர்மூலம் தான் சாத்தியப்படும் என்றால், அதனை எதிர்கொள்ள தமிழீழ விடுதலைப் புலிகளும், தமிழ் மக்களும் தயாராகவே உள்ளனர். அதன் மூலம் தமிழீழ விடுதலைப் போராட்டம் வெற்றியை எட்டும். இன்று இருக்கின்ற அரசியல் சூழல் தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு சாதகமாகவே உள்ளது.

இந்தச் சாதகமான சூழலைச் சரியாகப் பயன்படுத்த ஒருமித்த ஒற்றுமையை வெளிப்படுத்த வேண்டும்.

வயது வேறுபாடின்றி பெரும் எண்ணிக்கையில் மக்கள் முன்வந்து போராட்டத்தில் இணைவது என்பது மிகப்பெரிய வெற்றியைத் தரப்போகின்ற வெற்றியின் ஆரம்பம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# உயர்தர மாணவர்களுக்கான தமிழ்ப்பாட கருத்தரங்குகள்

கிளிநொச்சி—

அன்னை பூபதியின் நினைவு நாளை முன்னிட்டு தமிழீழ மாணவர் அமைப்பால் நடத்தப்படும் உயர்தர மாணவர்களுக்கான "தமிழ்"ப்பாடக் கருத்தரங்கில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் பயன்பெற்றுவருகின்றனர்.

நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட கருத்தரங்கு இன்றும் கிளிநொச்சி - முல்லைத்தீவு மாவட்டங்களில் நடத்தப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாணத்தின் முன்னணி ஆசிரியர்களைக் கொண்டு இந்த வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

கிளிநொச்சி மத்திய கல்லூரி கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற கருத்தரங்கில் 500 இற்கும் அதிகமான கிளிநொச்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட மாணவர்கள் பங்குகொண்டு பயன்பெற்றனர்.

இதேபோல் முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு மத்தியகல்லூரி, முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரி, மாங்குளம் மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் இந்தக் கருத்தரங்குகள் நடைபெற்றன.

# இடைத்தங்கல் முகாமிலுள்ள சிறார்களுக்கான கலைவிழா!

முல்லைத்தீவு—

முல்லைத்தீவு அபிவிருத்தி நிறுவனத்தால் யுனிசெப் நிறுவனத்தின் நிதியுதவியுடன் நடத்தப்பட்டு வரும் சிறுவர் பொழுது போக்கு மையத் திட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட 20 இடைத்தங்கல் முகாம் சிறார்களுக்கான கலைவிழா - நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு மகாவித்தியாலய மண்டபத்தில் காலை 10 மணிக்கு நடைபெற்றது.

உழைக்கும் மகளிர் நிறுவனத்தின் இணைப்பாளர் துஸ்யந்தினி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொதுச்சுடரை முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரச அதிபர் க.பார்த்தீபன் ஏற்றிவைத்தார்.

தமிழீழ தேசியக் கொடியை முள்ளியவளை நுண்கலைக் கல்லூரி அதிபர் மணிமொழி கிருபாகரன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து அன்னை பூபதியின் திருவுருவப் படத்துக்கான ஈகச்சுடரை முல்லைத்தீவு மணற்குடியிருப்பு கிராம அலுவலர் க.சௌந்தரராஜா ஏற்றிவைக்க, பொதுச்சுடரை புதுக்குடியிருப்பு நுண்கலைக் கல்லூரி அதிபர் சாம்பவி தணிகைமாறன், முள்ளிவாய்க்கால் கிழக்கு கிராம அலுவலர் தியாகராசா ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

இந்த நிகழ்வில் ஆசியுரையை முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரச அதிபர் க.பார்த்தீபன் நிகழ்த்தினார். தொடர்ந்து நடன, நாடகப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு முல்லைத்தீவு சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கியில் சேமிப்பு ஆரம்பிக்கப்பட்டு, வங்கிக் கையேடு பரிசாக வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் சிறார்கள், பெற்றோர்கள், ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (கு)

# மன்னார் உதைபந்தாட்ட சம்மேளனத்தால் நவீன விளையாட்டு மைதானம் அமைப்பு!

மன்னார்—

மன்னார் மாவட்ட உதைபந்தாட்ட சம்மேளனத்தால் மைதானம், பயிற்சி கூடம் என்பவற்றுக்கான அடிக்கல் நாட்டுவிழா கடந்த திங்கட்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்றது.

மன்னார் ஆயரால் அன்பளிப்பு செய்யப்பட்ட தாழ்வுபாடு- தாராபுரம் வீதியில் அமைந்துள்ள 5 ஏக்கர் காணியில் அகில இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தால் வழங்கப்பட்ட 15 மில்லியன் ரூபா நிதியிலே இந்த மைதானம், பயிற்சிக்கூடம் என்பன அமைக்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வில் அடிக்கல்லை மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை நாட்டிவைத்தார்.

இந்த நிகழ்வில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.விநோனோதராதலிங்கம், மன்னார் பிரதேச செயலர் ஸ்ரான்லி டிமெல், மன்னார் மாவட்ட விளையாட்டு அதிகாரி தாழ்வுபாடு பங்குத்தந்தை நானாதிக்கம் மற்றும் விளையாட்டு ஆர்வலர்கள், பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

(மோ)

# இதுவரையில் புனரமைக்கப்படாத கட்டைக்காடு - இயக்கச்சி வீதிகள்

வடமராட்சி கிழக்கு—

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் கிழக்கெல்லையில் அமைந்துள்ள கேவில் போக்கறப்பு, சுண்டிக்குளம் நித்தியவெட்டை, கட்டைக்காடு, போக்கறப்பு கடற்கரை கிராமங்களில் வசிக்கும் மக்கள் ஏ 9 வீதிவழியாக கிளிநொச்சி - முல்லைத்தீவு பிரதேசங்களுக்குப் போக்குவரத்து செய்வதற்கு கட்டைக்காடு, புல்லாவெளி, இயக்கச்சி வீதியைப்பயன்படுத்தி வந்தனர்.

நீண்டகாலமாக இந்த வீதி புனரமைக்கப்படாமையாலும், கடந்தகால போர் நடவடிக்கைகளாலும் இந்த வீதியில் புளியடிச் சந்தியில் இருந்து கட்டைக்காடு வரையான வீதி முற்றாகச் சேதமடைந்துள்ளது. இந்த வீதியால் வாகனங்கள், பொதுமக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

13 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள இயக்கச்சி ஏ 9 வீதி வழியாக போக்குவரத்துச் செய்யும் மக்கள் வீதி பழுதடைந்துள்ளமையால் கட்டைக்காடு, மருதங்கேணி - புதுக்காடு வழியாக 25கிலோ மீற்றர் தூரம் போக்குவரத்து செய்து ஏ 9 வீதியை அடைந்து பிரயாணத்தை மேற்கொள்கின்றனர்.

கட்டைக்காடு இயக்கச்சி வீதியில் சேதமடைந்த பகுதியை புனரமைப்பதற்கு இதுவரை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கைகள் எதுவும் எடுக்காதது குறித்து மக்கள் விசனம் தெரிவித்தனர்.

# வட்டக்கச்சி உப தபாலகத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவுவிழா

இராமநாதபுரம்—

வட்டக்கச்சி உப தபாலகத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், மலர் வெளியீடும் எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

வட்டக்கச்சி உப தபாலதிபர் திருமதி.ச.றோகன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் - பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம், வடக்கு பிரதி தபால் மா அதிபர் வீ.குமரகுரு ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி பிரதேச தபால் அத்தியட்சகர் சி.பூ. இராசதுரை, முல்லைத்தீவு பிரதேச தபால் அத்தியட்சகர் எஸ்.ஜெயரட்ணம், கிளிநொச்சி தபாலதிபர் மா. பேரம்பலம், கரைச்சி பிரதேச செயலர் க.சுலோஜினி, கிளிநொச்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் கி.சின்னராசா, கிளிநொச்சி நிர்வாக சேவை பொறுப்பாளர் சி.விஜிதரன், வட்டக்கச்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் திருமாறன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்த நிகழ்வில் நூலாய்வினை, விசேட பதில் ஆணையாளர் ச.மணிமேகலை, கரைச்சிப் பிரதேச செயலக உத்தியோகஸ்தர் சி.நித்தியானந்தன், ஓய்வுபெற்ற கிராம அலுவலர் எஸ். சின்னத்தம்பி, இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அதிபர் சி.பாலகிருஷ்ணன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

பதிலுரையை ஓய்வுபெற்ற தபாலதிபர் பு.கந்தசாமி நிகழ்த்தவுள்ளார். (இ)

# மக்கள் குறை நிவர்த்தி சேவை

மன்னார்—

வடக்கு - கிழக்கு மாகாண விவசாய காணி, கால்நடை அபிவிருத்தி நீர்பாசன கடற்தொழில் அமைச்சால் நடத்தப்படும் மக்கள் குறை நிவர்த்தியும், சேவையாற்றும் கண்காட்சியும் எதிர்வரும் 2 ஆம் திகதி மன்னார் - முருங்கன் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (மோ)

# நடமாடும் சேவை

கிளிநொச்சி—

கிளிநொச்சி பிரதேச செயலகத்தால் காலங்கடந்த பிறப்பு, இறப்புகளை பதிவு செய்வதற்கான நடமாடும் சேவை இன்று கிளிநொச்சி பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

காலை 9 மணி தொடக்கம் மாலை 3 மணிவரை நடைபெறவுள்ள இந்தச் சேவையில் கிளிநொச்சி பிரதேசத்திலுள்ள மக்கள் தமது காலம் கடந்த பிறப்பு, இறப்பு பதிவை மேற்கொள்ளலாம். (ரி)

# கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கங்களுக்கான வலுப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல்

முல்லைத்தீவு —

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பிரதேசங்களில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு கழகத்தால் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களுக்கான வலுப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் நடைபெற்று வருகின்றது.

புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்குட்பட்ட கால்நடை வளர்ப்போருக்கான கூட்டுறவுச் சங்கங்களுக்கான கலந்துடையாடல் புதுக்குடியிருப்பு பிரதேச மண்டபத்தில் நேற்றுமுன்தினம் காலை 10 மணிக்கு நடைபெற்றது.

கரைத்துறைப் பற்று பிரதேசத்துக்குட்பட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கங்களுக்கான கலந்துடையாடல் இன்று காலை 10 மணிக்கு குமுழமுனை கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துடையாடலில் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் கேட்டுள்ளனர்.

(09)

# கள்ளப்பாடு-தீர்த்தக்கரை பிரதேசத்தில் முன்பள்ளிக்கான அடிக்கல் நாட்டுவிழா



முல்லைத்தீவு—

முல்லைத்தீவு கள்ளப்பாடு தீர்த்தக்கரை முன்பள்ளியுடன் இணைந்த பொதுநோக்கு மண்டபம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா கடந்த திங்கட் கிழமை பிற்பகல் 3.30மணியளவில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் முதலாவது அடிக்கல்லை கொலன்ட் மனித உரிமைகள் மைய அமைப்பைச் சேர்ந்த இந்திரன் நாட்டி வைத்தார்.

தொடர்ந்து அடிக்கல்லை தமிழர் புனர்வாழ்வுத் திட்டமிடல் பணிப்பாளர் லோறன்ஸ் கிறிஸ்ரி, சுனாமி வேலைத்திட்டப் பணிப்பாளர் றெஜி ஆகியோர் நாட்டி வைத்தனர். 68 லட்சம் ரூபா பெறுமதியில் இந்தக் கட்டடம் அமைக்கப்படவிருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்தக் கட்டடம் அமைக்கப்படவிருக்கும் கள்ளப்பாடு கிராமமானது முல்லைத்தீவில் சுனாமியால் பாதிக்கப்பட்ட கிராமங்களில் மிகவும் பாதிக்கப்பட்டதொரு கிராமமாகும்.

இந்தக் கட்டடத்தை அமைப்பதற்காக Stiching Heeru Voor Sri Lanka என்னும் அமைப்பே நிதிப்பங்களிப்பைச் செய்துள்ளது.

நமது ஈழநாடு

சிந்தனைக்கு!

இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின் - திருக்குறள்

## நமது நோக்கு

# ஆபத்தை நோக்கி...!

புத்தூர் பகுதியில் ஐந்து அப்பாவிப் பொதுமக்கள் ஒரே இரவில் படுகொலை செய்யப்பட்டிருக்கும் சம்பவம் குடாநாட்டையே ஒரு உலுக்கு உலுக்கியிருக்கிறது.

கடந்த சில நாட்களாகவே குடாநாட்டில் அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டுவந்த நிலையில் நேற்றுமுன்தினம் இரவு நிகழ்ந்த கொடூரம் அனைவரையும் அதிர்ச்சியில் உறைய வைத்திருக்கிறது.

கடந்த டிசெம்பர் - ஜனவரி மாத கொதிநிலையின் போது - யாழ். கோட்டைப் பகுதியில் ஐந்து பேர் இதே போல படுகொலை செய்யப்பட்டதும் - திருகோணமலையில் ஐந்து மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டதுமான சம்பவங்கள்தான் நினைவுக்கு வருகின்றன.

இந்தப் படுகொலைகளுக்கு இராணுவத் தரப்பே முழுமையான பொறுப்பையும் ஏற்கவேண்டும். ஏனெனில் - இராணுவ முகாமுக்கு மிக அண்மையில்தான் இந்தக் கொடூரம் நிகழ்த்தப்பட்டிருக்கிறது.

அதுவும் படையினரின் உயர்பாதுகாப்பு மிக்க பிரதான விநியோகப் பாதைகளில் ஒன்றுக்கு மிக நெருக்கமாகவே இந்தச் சம்பவம் நடந்தேறியிருக்கிறது. கடந்த ஒக்ரோபரில் இதேபகுதி இராணுவ முகாமைச் சேர்ந்த சிப்பாய் ஒருவர் வீடொன்றுக்குள் பிரவேசிக்க முயன்றபோது பொதுமக்கள் துரத்தினர்.

அவர் குறிப்பிட்ட முகாமுக்குள் தஞ்சம் தேடவே - பொதுமக்கள் ஒன்றுகூடி நீதி கேட்டுப் போராடினர்.

அதன்போது அப்பாவி இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டதுடன் பலர் காயப்படுத்தப்பட்டனர். இந்தச் சம்பவத்தின் பின்னர் இந்தப் பகுதி மக்களுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் நிறையவே முரண்பாடுகள் நிலவி வந்திருக்கின்றன.

பொதுமக்களை வஞ்சம் தீர்க்கும் வகையில் படையினர் நடந்துகொள்வதான புகார்கள் தெரிவிக்கப்பட்டு வந்தன.

இந்தச் சூழலில்தான் - நேற்றுமுன்தினம் இரவு இந்தப் படுகொலைகள் நிகழ்த்தப்பட்டிருக்கின்றன. ஓட்டோவில் சென்றவர்களை படைமுகாமில் வழிமறித்து விசாரித்த பின்னர் ஓடவிட்டுச் சுட்டே இந்தக் இரத்தக் களரி நிகழ்த்தப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

ஏன் இந்தக் கொடூரக் கொலைகள் நிகழ்த்தப்பட்டன என்பது குறித்து அரசதரப்பிலிருந்தோ, இராணுவத் தரப்பிலிருந்தோ - இந்தப் பகுதி எழுதப்படும் வரை - வாய் திறக்கப்படவில்லை.

வேறெங்காவது ஒரு சம்பவம் நிகழ்ந்துவிட்டால் விழுந்தடித்துக்கொண்டு அடுத்த நிமிடமே உலகுக்குச் சொல்லி ஒப்பாரிவைக்கும் அரசும், படைத்தரப்பும் - சுமார் 20 மணித்தியாலங்களாகக் காட்டிய மௌனமே இந்தச் சம்பவத்துக்கு காரணமானவர்களைச் சுட்டிக் காட்டியுள்ளன.

திருகோணமலையில் நடைபெற்ற இனப்படுகொலையின் சூடு ஆற முன்னரே - குடாநாட்டில் அப்பாவிகள் அடுக்கடுக்காக படுகொலை செய்யப்படுகின்றனர்.

இவையும்கூட இனப்படுகொலையின் இன்னொரு வடிவமாகவே உள்ளன. 1980 களின் தொடக்கத்தில் இப்படிப்பட்ட படுகொலைகள் தீவிரமாக இடம்பெற்றதன் விளைவாகவே ஆயுதப் போராட்டம் புதிய வடிவம் பெற்றது.

அதுபோலவே திருகோணமலையிலும், யாழ்ப்பாணத்திலும் அப்பாவிகள் கொல்லப்பட்டதன் பின்னரே - டிசெம்பர், ஜனவரி மாதங்களில் ஒரு கொந்தளிப்பான சூழல் உருவானது.


இப்போது புத்தூரில் நிகழ்த்தப்பட்டிருக்கும் இனப் படுகொலையும்கூட தமிழ்மக்களை ஆத்திரமடையச் செய்யும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

தொடர்ச்சியாக அப்பாவித் தமிழ்மக்களை படுகொலை செய்துகொண்டு சர்வதேச அரங்கில் அரசாங்கம் போடும் சமாதான வேசம் கலைந்துபோகும் காலம் வெகு தூரத்தில் இல்லை.

இத்தகைய படுகொலைகளைத் தொடர அரசு இடமளித்தால் அதன் விளைவு ஆபத்தான கட்டத்துக்குள்ளேயே நாட்டைக் கொண்டும் செல்லும் என்பதை அரசு உணர்ந்துகொண்டால் சரி!

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

## நாடும் நடப்பும்



கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களில்

# கணக்காய்வாளர் இன்மையால் கணக்கறிக்கைகள் தாமதம்!

தாளையடி

யாழ். மாவட்டத்திலுள்ள கடற்தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள், சமாசங்களது வருடாந்த கணக்கறிக் கைகள் உத்தியோகத்தர்கள் இல்லாமையால் பல வருடங்களாக கணக்காய்வு செய்யப் படாமலிருக்கிறது.

வங்கிக்கடன்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலம் வழங்கப்படும் நிதி உதவிகள், சுழற்சி முறைக்கடன்களின் கணக்காய்வு அறிக்கைகள் பூர்த்தி செய்யப்படாமையால் சங்கங்கள், சமாசங்கள் பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் கடற்தொழிலாளர் சம்மேளனம் 1, பிரதேச மட்ட சமாசங்கள்11, கிராமிய மட்ட சங்கங்கள் 124 என மொத்தம் 136 கடற்தொழில் சார்ந்த அமைப்புக்கள் இயங்குகின்றன.

இவைகளுக்கான கணக்காய்வு கள் செய்யப்படாமையால் ஒவ்வொரு அமைப்பினதும் நிதி நிலைப்பாட்டை அறிய முடியாதிருப்பதுடன், இந்த அமைப்புக்களின் வளர்ச்சியும் பாதிப்படைகிறது.

இவைகளைக் கருத்திற்கொண்டு யாழ்.மாவட்டத்திலுள்ள கடற்தொழில் சார் அமைப்புக்களுக்கு தனியானதொரு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (கடற்தொழில்) ஒருவரை நியமித்து தரும்படியும், கடற்தொழில்சார் அமைப்புக்களை கணக்காய்வு செய்வதற்கு தனியானதொரு பிரிவை அமைத்துத் தரும்படியும் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் (வடக்கு,கிழக்கு) யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோரை வேண்டுவதென அண்மையில் நடைபெற்ற யாழ்.மாவட்ட கடற்தொழிலா ளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

(21)

கிரேக்க அரசின் அழைப்பின் பேரில்

# சுனாமியால் பெற்றோரை இழந்த 103 சிறுவர்கள் கிரீஸிற்கு பயணம்

கொழும்பு

சுனாமி அனர்த்தத்தால், தாய் தந்தையரை இழந்த 103 பேர் கிரேக்க அரசின் அழைப்பின் பேரில் கிரீஸில் இரண்டு வாரகால சுற்றுப் பயணத்தில் ஈடுபட்டுள்ளனர்.

சுனாமி அனர்த்தத்தால் பெற்றோரை இழந்த வடக்கு - கிழக்கு மற்றும் தென் பகுதி பிள்ளைகள் இந்த பயணத்தில் பங்கேற்றுள்ளதாகவும், இதற்கான செலவினை கிரேக்க அரசே பொறுப் பேற்றுள்ளதாகவும், நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு ஆணையாளர் அபேகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கடந்த 13ஆம் திகதி சென்ற இவர்கள் கிரிஸில் நடைபெறும் சிறுவர் முகாமில் பங்கேற்பதுடன் ஆளுமை மற்றும் மானசீக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களிலும் கலந்து கொள்வரெனவும் அவர் தெரிவித்தார்.

இரண்டு வாரங்கள் கிரீஸில் தங்கும் இவர்களுக்கு அந்த நாட்டின் புராதன இடங்களை காண்பிப்பதற்கும், நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், இந்த சிறுவர்கள் குழுவினருடன் நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு உதவிஆணையாளர் ஒருவரும், சிறுவர் உரிமை அதிகாரிகள் மற்றும் நன்னடத்தை அதிகாரிகள் உட்பட 12 பேர் அடங்கிய அதிகாரிகள் குழுவும் சென்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.(தே)

# கடனாக வழங்கிய பணத்தை மீளப் பெற்றுத்தரக்கோரிக்கை

மானிப்பாய்

தொழில் முயற்சியில் ஈடுபட்டு வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கென அங்கத்தவர்களுக்கு கடனாக வழங்கப்பட்ட பணத்தை அவர்களிடமிருந்து மீட்டுத் தருமாறு மானிப்பாய் மேற்கு கிராம முன்னேற்ற சங்கம், வலிதென்மேற்கு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஊடாக பிரதேச செயலரைக் கோரியுள்ளது.

அரச சார்பற்ற நிறுவனம வழங்கிய நிதியில் அங்கத்தவர்களுக்கு சுழற்சி முறைக் கடனாக வழங்கப்பட்ட பணம் இதுவரை அவர்களால் திருப்பி ஒப்படைக்கப்படவில்லை. இதனால் வறிய குடும்பங்களைச் சேர்ந்த ஏனைய அங்கத்தவர்களுக்கு கடன் வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, இதனைக் கருத்திற்கொண்டு, கடனாக வழங்கப்பட்ட பணத்தை அவர்களிடமிருந்து அறவிட்டுத் தருமாறு சங்கத்தலைவர் க.முதலியார் பிரதேச செயலருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# விண்ணப்பங்களை ஒப்படைக்கவும்!

யாழ்ப்பாணம்

கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் காணி இடாப்பு தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருவதனால் காரைநகர் விவசாயிகள், விவசாய சம்மேளன அங்கத்தவர்கள் ஊடாக விண்ணப்பங்களைப் பெற்று எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் அவற்றை ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விண்ணப்பங்களுடன், காணி உறுதியின் நிழற்பிரதியை ஒப்படைக்க வேண்டும். அது இல்லாதவர்கள், குத்தகைச் சீட்டின் நிழற்பிரதியை இணைத்து வழங்க வேண்டும். இந்தப் பதிவுகளை உறுதிப்படுத்தியவர்களுக்கே எதிர்காலத்தில் உரமானியம் உட்பட ஏனைய சலுகைகளை வழங்க முடியுமென காரைநகர் கமநலசேவை உத்தியோகத்தர் தெரிவித்தார்.

# அரச சேவைக்கு 700பேர் இணைப்பு

கொழும்பு

அரச முகாமைத்துவ உதவியாளர் சேவைக்கு மேலும் 700 பேரை இணைத்துக்கொள்வதற்கு பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

கடந்த மாதம் முதல் வாரம் நடத்தப்பட்ட நேர்முகத் தேர்வின் மூலம் இவர்கள் புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். எழுதுவினையர் மற்றும் முகாமைத்துவ சேவைக்காக 2002ஆம் ஆண்டு நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சைப் பெறுபேற்றின் அடிப்படையில் இவர்கள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

இந்தப் பரீட்சையின் மூலம் அரச சேவைக்கு இணைத்துக் கொள்ளும் இறுதிக் குழு இதுவெனவும், அரச சேவை வெற்றிடங்களுக்கு எதிர்காலத்தில் புதிதாக பரீட்சைகள் நடத்தப்படுமென அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.(தே)

# வீதியைத் திருத்துமாறு மக்கள் கோரிக்கை!

யாழ்ப்பாணம்

நீண்ட காலமாக திருத்தப்படாதுள்ள மானிப்பாய் சென்ற் அன்ரனீஸ் வீதியை புனரமைக்குமாறு அந்தப் பகுதி மக்கள், வலிதென் மேற்குப் பிரதேச செயலாளர் கோரியுள்ளார்.

சுதுமலை தாவடி வீதியையும், மானிப்பாய் பிரதான வீதியையும் இணைக்கும் இந்த வீதி கடந்த 30 வருடங்களுக்கு மேலாகத் திருத்தப்படாமல் உள்ளதால், மக்களின் போக்குவரத்துக்குப் பெரும் இடையூறாக உள்ளது. குறிப்பாக இரண்டு பிரபல பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்கள் மழை நேரங்களில் பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாகின்றனர்.

போக்குவரத்து மேற்கொள்ள முடியாமல் இருக்கும் இந்த வீதியை மாணவர்கள், பொதுமக்கள் எனப் பல்வேறு தரப்பினரின் நலன்கருதி முன்னுரிமை கொடுத்து இந்த வீதியைப் புனரமைக்குமாறு மக்கள் பிரதேச செயலரைக் கேட்டுள்ளனர்.

# நோய்த் தொற்றுக்கு காரணமாகும் நிலத்தடி நீர் மாசுபடுதல்

சுகாதாரமான வாழ்க்கைக்கு சுத்தமான நீர் அத்தியாவசியமானது என்பது சகலரும் அறிந்த உண்மையாகும். புவியின் மீதுள்ள சகல மனிதர்களுக்கும் போதியளவு சுத்தமான நன்னீர் வழங்கல் ஓர் அடிப்படைத் தேவையாகும். எனினும், உலகளாவிய ரீதியில் பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு இது கிடைக்கப் பெறவில்லை என்பது ஒரு கசப்பான உண்மையாகும்.

உலகெங்கும் நன்னீர் வளங்கள் அளவுக்கதீக பாவனைக்கும், பலவீனமான முகாமைத்துவத்துக்கும் உட்படுத்தப்படுவது மட்டுமல்லாது சூழலியல் தரம் இழத்தலாலும் அவை அச்சுறுத்தப்படுகின்றன.

நன்னீர் மாசுறுதலின் பிரதான காரணிகள் சுத்திகரிக்கப்படாத கழிவின் வெளியேற்றல், கைத்தொழில் அழுக்குகளைச் சேர்த்தல், விவசாய வயல்களில் இருந்து வழிந்தோடும் இரசாயனங்கள் என்பனவாகும். கைத்தொழில் வளர்ச்சி, நகர் மயமாக்கல், செயற்கை சேதன பதார்த்தங்களின் அதிகரித்த பயன்பாடு ஆகியன நன்நீர் நிலைகள் மீது தீவிர பிரதிகூலமான தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. அபிவிருத்தியடைந்த நாடுகளில் பல்வேறு இரசாயன சேர்க்கைகள் மூலம் நீர் மாசுபடும் வேளையில் வளர்முக நாடுகளில் நீர் மாசடைதலுக்கு முக்கிய காரணம் விவசாய நிலங்களின் ஊடாக வழிந்தோடும் இரசாயனங்கள் ஆகும். இரசாயனங்கள் மூலம் மாசுபடுத்தப்பட்ட குடிநீரானது பல்வேறு நோய்த் தொற்றுதல்களுக்குக் காரணமாவதோடு, ஒவ்வொரு வீடுகளிலும் இவற்றுக்கான சரியான பரிகாரங்களைத் தேடுவதன் மூலம் அசுத்த நீர் மூலம் பரவும் நோய்களில் இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.



### யாழ்ப்பாண மாநகர சபை பிரதேசத்தில் நிலத்தடி நீர் மாசுறுதல்

யாழ்ப்பாண மாநகரசபையுடன் இணைந்து ஜேர்மன் நிறுவனங்களினால் செயற்படுத்தப்படும் நிலத்தடி நீர் பாதுகாப்புச் செயற்திட்டத்தின் ஓர் அங்கமாக யாழ்ப்பாண மாநகரசபையின் எல்லைக்குட்பட்ட, தெரிந்தெடுக்கப்பட்ட மாதிரிப் பிரதேசத்தில் செயற்படுத்தப்பட்ட நில நீர் பரிசோதனையானது இந்தப் பகுதியில் உள்ள 64 வீதம் கிணறுகள் பல்வகை இரசாயனங்களின் சேர்க்கையால் மாசுபடுத்தப்பட்டிருந்தது என்பதையும், அவற்றின் காரணிகளையும், விவரமாக எடுத்துக்காட்டியதை சென்ற கட்டுரையில் பார்த்தோம். இத்தகைய மாசுபடுத்தலுக்கு முக்கிய காரணமாக நீரில் அதிக அளவில் காணப்பட்ட பின்வரும் காரணங்கள் இனங் காணப்பட்டுள்ளன. அவையாவன -

- மின் கடத்தற்தன்மை
- குளோரைட்டு
- நைதரேற்று
- சல்பேட்டு
- பொசுபேட்டு
- இரும்பு
- pH
- மொத்த கோலி போமும் ஈஹோலியும்

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் தேர்ந்தெடுக்கப்பட்ட மாதிரிப் பிரதேசத்தில் உள்ள 64 கிணறுகளில் இருந்து சேகரிக்கப்பட்ட நீர் மேலே கூறிய காரணிகளின் தாக்கத்தை இனங் காண்பதற்காகப் பரிசோதிக்கப்பட்ட போது 41 கிணறுகளில் இருந்து பெறப்பட்ட மாதிரிகள் மாசடைந்திருந்தன என்பதையும், அவை பாவனைக்கு உகந்ததல்ல என்பதையும் காணக் கூடியதாக இருந்தது.

இந்த மாசுறுதலுக்கான பிரதான காரணங்களாக அதிகரித்த மின் கடத்தற்தன்மை, குளோரைட்டு, நைதரேற்று, சல்பேட்டு, பொஸ்பரேட்டு மற்றும் மொத்த கோலிபோம் ஈ கோலி, பற்றீரியா என்பவற்றின் உயர்மட்டங்கள் காணப்பட்டன. கிணற்றுநீருக்குப் புறம்பாக மாதிரிப் பிரதேசத்தில் இருந்து பெறப்பட்ட குழாய் நீர் மாதிரிகளும் சோதிக்கப்பட்டு உயர் நைதரேற்று பொஸ்பரேட்டு மட்டங்கள் காரணமாக நாவாந்துறை கடற்கரைப் பிரதேசக் குழாய் நீர் மாசடைந்துள்ளது எனக் கண்டறி யப்பட்டது. மத்திய பேரூந்து நிலையப் பிரதேசம், வைத்தியசாலை, தற்காலிகத் திண்மக் கழிவு சேகரிப்பு இடங்களுக்கு அருகாமையில் உள்ள பிரதேசம் என்பவற்றில் உள்ள கிணற்று நீர் பற்றீரியா தொற்றினாலும், நைதரேற்றாலும் மாசடைந்திருந்தன. இந்தக் கிணறுகளில் மொத்த கோலி போம் மற்றும் ஈ கோலி பற்றீரியாக்கள் எண்ணிக்கை உயர்வாகக்காணப்பட்டது. அநேகமான கிணறுகளில் மின் கடத்தற்தன்மை, குளோரைட்டு, சல்பேட்டு, பொஸ்பேற்று என்பன உயர் மட்டத்தில் காணப்பட்டன. நகர்ப்புறப் பிரதேசங்களில் பல வித்தியாசமான வழிகளில் நீர் மாசடைகிறது. நீர் வழங்கல் மற்றும் சாக்கடைக் குழாய்கள் மிக நெருக்கமாகச் செல்லும் இடங்களில் உள்ள கசியும் நீர்க்குழாய் மூட்டுக்கள் மிகப் பொதுவான காரணங் களாகும். சில வேளைகளில் திண்மக் கழிவுகள் கொட்டப்படும் நிலையங்களில் ஏற்படும் கசிவும் மற்றும் சாக்கடை நீர்க்கசிவும் நீர் மூலங்கள் மாசடைவதற்கான பிரதான காரணங்களாக இருக்கின்றன.

| நீர்க்காவு நோய்கள் | நோய்க்காரணி |
|---|---|
| நெருப்புக்காய்ச்சல் (Typhoid) வாந்திபேதி, Paratyphoid காய்ச்சல், வயிற்றோட்டம் | பற்றீரியாக்கள் |
| செங்கண்மாரி, போலியோ | வைரசுக்கள் |
| Amoebic, வயிற்றோட்டம் | புரோட்டோசோவா |

### சுகாதாரத்துக்கு ஏற்படும் பாதிப்புகள்

இயற்கையாகவோ, மனித தலையீட்டினாலோ நீரில் சேரும் இரசாயனங்கள் தீவிரமான சுகாதாரப் பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன.

**1) நைதரேற்று :**

நைதரேற்றால் மாசுற்ற குடிநீர் மூளைக்குச் செல்லும் ஒட்சிசன் அளவை தடை செய்து 'நீலக் குழந்தை'ஐ ஏற்படுத்துவதனால் விசேடமாக சிசுக்களுக்கு மரணத்தை ஏற்படுத்தலாம். இது சமிபாட்டுக் குழாய் புற்று நோயையும் ஏற்படுத்துகிறது. அது பாசிகளை வளரச் செய்து மேற் பரப்பு நீரில் நற்போசணையாக்கத்தை விளைவிக்கும்.

**2) குளோரைட்டுகள் :**

இது நீரில் அதிகளவில் இருக்கும்போது பருகுவதற்கும், நீர்ப்பாசனத்துக்கும் இதனைப் பாவிக்க முடியாது. நீரில் உள்ள குளோரைட்டுகள் இனப்பெருக்கத்தொகுதி, மற்றும் நரம்புத் தொகுதிகளில் சேதத்தை ஏற்படுத்தும். குளோரைட்டின் உயர் அளவு தொண்டைப் புற்று நோயையும் ஏற்படுத்த வல்லது.

**3) பொஸ்பரஸ் :**

நீரில் உள்ள பொஸ்பரேட்டு ஆர்சனிக் உள்ளடக்கத்தை அதிகரிக்கச் செய்து சுகாதாரத் தாக்கத்தை ஏற்படுத்துவதோடு அது தோற்படை நோயையும் ஏற்படுத்துகிறது.

**4) ஈயம் :**

குழாய்கள், பொருத்துகள், பற்றாசு மற்றும் சில வீட்டுக் குழாயமைப்பு முறைமைகளின் சேவை இணைப்புகள் ஆகியன குடிநீரை மாசுபடுத்தும் ஈயத்தைக் கொண்டுள்ளன. இது உடலில் திரண்டு சேர்ந்து மத்திய நரம்புத் தொகுதியைப் பாதிப்பதால் சுகாதாரத்துக்குத் தீங்கு விளைவிப்பதாகும். பிள்ளைகளும், கர்ப்பிணிப் பெண்களும் கூடுதலாக ஆபத்துக்குள்ளாகலாம்.

**5) புளோரைட்டு :**

அளவுக்கதிகமாக புளோரைட்டு பற்கள் மஞ்சள் ஆவதையும், முள்ளந்தண்டுக்கு சேதத்தையும் மற்றும் முடமாக்கும் நோய்களையும் ஏற்படுத்தும்.

**6) நோய்கள் :**

நீர்க்காவு நோய்கள் அடிப்படையாக மாசுற்ற நீரின் ஊடாகப் பரப்பப்படும் தொற்று நோய்களாகும். இந்த நோய்கள் நேரடியாக அல்லது ஈக்கள் அல்லது அழுக்கு ஊடாகப் பரவியபோதும் இந்த நோய்கள் பரவுவதற்கான பிரதான ஊடகம் நீர் ஆகும். எனவே, அவை நீர்க்காவு நோய்கள் என்றழைக்கப் படுகின்றன.

அநேகமான குடல் நோய்கள் தொற்றக் கூடியனவாக இருப்பதோடு இவை மலக்கழிவினூடாகக் கடத்தப் படுகின்றன. வைரசு, பற்றீரியா, புரோட்டோசோவா, ஒட்டுண்ணி புழுக்கள் ஆகியவற்றை உள்ளடக்கும் நோயங்கிகள் நோயுற்ற நபர்களின் மலத்தின் ஊடாகப் பரம்புகின்றன. இந்த நோய்கள் மிகக்கூடிய சுகாதாரச் சீர்கேடுகள் உள்ள பிரதேசங்களில் மிகக் கூடுதலாகக் காணப்படுகின்றன. இந்த நோயங்கிகளின் நீர் மூலங்களின் ஊடாகப் பரவி, தொற்றலை ஏற்படுத்துகின்றன. இந்த நோய்கள் பொதுவாகத் தொற்றக் கூடியன என்பதால் நோயுற்ற நோயாளி ஒருவரைப் பராமரிப்போர் மிகவும் கவனமாக சுகாதாரத்தைப் பேண வேண்டும். செங்கண்மாரி (Hepatitis), வாந்திபேதி, வயிற்றோட்டம், நெருப்புக்காய்ச்சல் ஆகியன அயன மண்டலப் பிரதேசங்களில் பெருந்தொகையான மக்களைத் தாக்கும் மிகப் பொதுவான நீர்க்காவு நோய்களாகும். முக்கியமான நீர்க்காவு நோய்கள் கீழே பட்டியற்படுத்தப்பட்டுள்ளன.

நிலத்தில் இயற்கையாக உள்ள அல்லது மனித செயற்பாட்டால் சேர்க்கப்பட்ட பெருமளவிலான இரசாயனங்கள் நீரில் கரைந்து அதனூடாக நீரை மாசுபடுத்தி பல்வேறு நோய்களுக்கு இட்டுச்செல்கின்றன.

எனவே, சுகாதாரமான மகிழ்ச்சியான வாழ்க்கைக்காக நிலத்தடி நீரை மாசுபடுத்தக் கூடிய தமது செயற்பாடுகளையும், தலையீடுகளையும் தவிர்த்துக் கொள்ளல் ஒவ்வொரு தனிநபரினதும் கடமையாகும்.

எமது திண்மக் கழிவைப் பொருத்தமானவாறு அகற்றுதல், விதந்துரைக்கப்பட்டவாறு கிணற்றில் இருந்து தூரத்தில் பொருத்தமான மலசலகூடங்களை நிர்மாணித்தல், அடிப்படை சுகாதாரத்தைப் பேணுதல் ஆகியன அடர்த்தியான குடித்தொகையுள்ள மாநகரசபை பிரதேசங்களில் எமது சுகாதாரமான வாழ்க்கைக்கு இன்றியமையாததாகும்.

---

## விய புது வருடம் உங்களுக்கு எப்படி?

## தனுசு

**மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் கால்**

தனுசு ராசி அன்பர்களுக்கு அட்டமத்துச் சனியுடனேயே வருஷம் பிறக்கின்றது. இருந்தாலும் இலக்கிருதிபதியான குரு பகவான் 11 இல் சஞ்சரிப்பது சிறப்பான அம்சமாகும். பல கஷ்டமான நிலைமைகளிலும் நற்பலன்களை எதிர்பார்க்க முடியும். குடும்பத்தில் சில கஷ்டங்கள் தோன்றுமாயினும் அவற்றைச் சமாளித்துக் கொள்ள முடியும். தொடங்கும் கருமங்கள் சிரமங்களைத் தந்தாலும் இறுதியில் வெற்றியே கிடைக்கும். உடல் சுகக்குறைவும், குடும்பத்தில் வைத்தியச் செலவு ஏற்பட்டாலும் 11 இல் சஞ்சரிக்கும் குருபகவான் அத்தனையையும் சமாளிக்கும் வல்லமையைக் கொடுப்பார். வருடத்தின் முற்பாதியில் மங்கள சுபகருமங்கள் தடையின் மேல் கைகூடும். செலவுகள் அதிகமாக ஏற்பட்டாலும், எதிர்பாராத பண வருவாய் வந்து எல்லாவற்றையும் சமாளித்துவிடும். எனினும், உடல் நலத்தைப் பேணிக் கொள்ள வேண்டும். புத்திர பாக்கியம் இல்லத்தவர்களுக்கு வருட முற்பகுதியில் சந்தான விருத்தி கிட்டும்.

28.10.2006 இன் மேல் குருபகவான் விரயஸ்தானத்துக்கு வருவதால், கஷ்ட பலன்களே கூடுதலாக நடக்கும். தேவையற்ற வீண் செலவுகளை உண்டாக்கும். முயற்சிகளுக்கு அற்ப பலனே கிடைக்கும். தேகசுகம் இடையிடையே பாதிப்படையும். குடும்பத்தில் கருத்து வேற்றுமைகள் ஏற்படும். உறவினர்களின் உதவி தக்க சந்தர்ப்பத்தில் கிடைக்கும் பணக் கொடுக்கல், வாங்கல்களைக் கூடியளவு குறைத்துக் கொள்ளவும். எவருக்கும் பிணை போகக் கூடாது. வீண்வம்பு வழக்குகளும் வந்து சேரலாம். யாருக்கும் வாக்குறுதி கொடுத்தால் அதைக் காப்பாற்ற முடியாமலிருக்கும் நண்பர்களாக இருப்பவர்களாலும் தொல்லைகள் ஏற்படும். எடுக்கும் கருமங்கள் தடைப்பட்ட வண்ணமிருக்கும். வாகனம் செலுத்துபவர்களாயின் கூடிய கவனம் எடுக்க வேண்டும்.

உத்தியோகத்தர்களுக்கு வருஷத்தின் முற்பாதி காலத்தில் சிறப்பான பதவி உயர்வு, ஊதிய உயர்வுகள் கிடைக்கும். விரும்பிய இடமாற்றமும் வசதிகளும் கிட்டும். சிலருக்கு கௌரவம் மிக்க பதவி கிடைக்கலாம். தேகசுகம் அதிகம் பாதிக்காது. அதிகாரிகளை அனுசரித்துப் போவது நன்று. குரு மாற்றத்தின் மேல் 28.10.2006 இன் மேல் உத்தியோக நிலையில் பல சிக்கல்கள் தோன்றும். புதிய வேலை வாய்ப்புகள் தாமதமடையும், வேலைப்பளு அதிகரிக்கும். குடும்பத்திலும் நிம்மதி குறைவாகவே இருக்கும். சக ஊழியரின் ஒத்துழைப்பு கிடையாது.

வர்த்தகளுக்கு வருட ஆரம்பத்தில் வியாபாரம் வளர்ச்சியடையும். லாபங்களும் அதிகரிக்கும். எடுக்கும் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். கூட்டுத் தொழில் சிறப்படையும். வங்கி உதவிகள் அனுசரணையாக இருக்கும். வருட பிற்பாதியில் போட்டிகள், பொறாமைகள் உண்டாகி லாபம் குறையும். கூட்டாளிகளுடன் கருத்து வேறுபாடுகள் தோன்றும். வெளிநாட்டுத் தொடர்புகள் கஷ்டங்களைக் கொடுக்கும். கொடுக்கல் வாங்கல்கள் சிக்கலை ஏற்படுத்தும். வியாபாரம் மந்தநிலை காட்டும் கடன்காரர்களிடம் விரோதங்கள் ஏற்படும். குறிப்பிட்ட தொகையை இழக்க நேரலாம்.

பெண்களுக்கு வருட முற்பாதி பலவகையாலும் சிறப்பாக இருக்கும். மனம் அமைதியாக இருக்கும். கணவன் புத்திரர்கள் ஒற்றுமை சிறக்கும். மணப் பருவமடைந்த பிள்ளைகளுக்கு திருமணம் கை கூடும். தடைப் பட்டிருந்த புத்திர பாக்கியம் கிடைக்கும். வருட பிற்பாதி சோதனை தரும் காலமாகவே அமையும். உடல் நலம் பாதிக்கப்படும். கணவன், மனைவி ஒற்றுமை குறையும். வைத்தியச் செலவுகளும் அதிகமாகும். சனி, வியாழன் கிரகங்களுக்கு வழிபாடு செய்யவும்.

மாணவர்களுக்கு கல்வியிலும், விளையாட்டுக்களிலும் சிறப்பாக ஈடுபட வாய்ப்புகள் கிடைக்கும். முயற்சிகள் யாவும் அனுகூலத்தையே தரும். வருடப்பிற்பாதி பல தொல்லைகளை உண்டாக்கும். தேவையில்லாத நட்பினால் கல்வி முன்னேற்றம் தடைப்படும். ஆசிரியர், பெற்றோரின் ஆதரவு குறையும். பரீட்சையில் மதிப்பெண் குறையும்.

(தொடரும்...)

சி.சிதம்பரநாதக் குருக்கள்

# தி.மு.க. அறிக்கையைப் பார்த்து அ.தி.மு.க. மிரண்டு போயுள்ளது

## என்கிறார் சிதம்பரம்



காரைக்குடி—

தி.மு.க. தேர்தல் வாக்குறுதியைக் கண்டு மிரண்டு போன அ.தி.மு.க. இலவசமாக 10 கிலோ அரிசி தருவதாக அறிவித்திருக்கிறது. அரிசி கிலோ 2 ரூபாவுக்கு சாத்தியமில்லை என்று கேலி பேசிய வைகோ, இப்போது அ.தி.மு.கவின் இலவச அரிசித் திட்டம் சாத்தியம் என்று சொல்லப் போகிறாரா? இதற்கு அவரது பதிலை, எதிர்பார்க்கிறேன் என மத்திய நிதிய மைச்சர் ப.சிதம்பரம் கூறியுள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது -

ஏழைகளுக்கு நியாய விலைக் கடைகளில் ஒரு கிலோ அரிசி 2 ரூபாவுக்கு வழங்கப்படும் என தி.மு.க. வாக்குறுதி தந்திருப்பது இந்தத் தேர்தலில் ஒரு சுவையான விவாதப் பொருளாக மாறியிருக்கிறது.

மத்திய அரசு பல மாநிலங்களில் அரிசி கொள்முதல் செய்கிறது. கொள்முதல் விலைக்குக் குறைவாக மாநில அரசுகளுக்குத் தேவைக்கேற்ப அரிசி வழங்கப்படுகிறது. ஆகவே அரிசியில் முதல் மானியம் மத்திய அரசுடையது.

மத்திய அரசு அரிசிக்கு மூன்று விலைகளை நிர்ணயித்துள்ளது. 01.04.2006 ஆம் திகதியில் நிர்ணயிக்கப்பட்ட விலையில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை. வறுமைக் கோட்டுக்குமேல் உள்ளவர்களுக்கான விலை ரூபா 7.95, வறுமைக் கோட்டுக்கு கீழேயுள்ளவர்களுக்கான விலை ரூபா 5.65, அந்த்யோத்யா திட்டத்தின் கீழ் ரூபா 3.

அரிசியைப் பெற்றுக் கொண்ட மாநில அரசுகள் மத்திய அரசு குறிப்பிட்டுள்ள விலையில் அரிசியை விற்பதில்லை. அந்தந்த மாநில அரசுகளின் நிதி ஆதராங்களுக்கு ஏற்ப மாநில அரசுகளே விலை நிர்ணயம் செய்து கொள்ளலாம். அதன்படி, தமிழக அரசு ஒரு கிலோ அரிசி ரூபா 3.50 என விலை நிர்ணயம் செய்து அரிசியை வழங்குகிறது. இதில் மாநில அரசு தருகின்ற மானியம் உள்ளது. ஆகவே, அரிசியில் 2 ஆவது மானியம் மாநில அரசுடையது.

கூடுதல் மானியம் தருவது மாநில அரசுதான். உதாரணமாக - ஒரு கிலோ ரூபா 5.65 என்று பெற்ற அரிசியை ரூபா 3.50 என்ற விலைக்கு விற்கும்போது மாநில அரசின் மானியம் இதில் இடம்பெறுகிறது.

தி.மு.க. தேர்தல் அறிக்கையில் 1 கிலோ அரிசி 2 ரூபாவுக்கு வழங்குவோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளதன் பொருள் என்ன? ஏற்கவே உள்ள மானியத் தொகையைக் கூடுதலாக்கி, 1 கிலோ அரிசிக்கு கூடுதலாக ரூபா 1.50 மானியம் வழங்கப்படும் என்று பொருள். இதில் மர்மமோ, மாயமோ கிடையாது. கூடுதல் மானியம் வழங்குவதா? வேண்டாமா? என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரம் ஒவ்வொரு மாநில அரசுக்கும் உண்டு. என்னிடம் கூடுதல் மானியம் சாத்தியமா, சாத்தியமில்லையா என்று கேட்டதற்கு சாத்தியம் என்று பதில் கூறினேன். என் நிலையில் எந்த முரண்பாடும் கிடையாது.

ஒரு மாநில அரசு மானியம் வழங்க முன்வந்தால், உடனடியாக இந்தியா முழுவதும் அதை மத்திய நிதியமைச்சர் அமுல்படுத்துவாரா என்ற கேளவி நகைப்புக்குரியது. மத்திய அரசோ, மத்திய நிதியமைச்சரோ கூடுதல் மானியத்தைத் தரவில்லை. மாநில அரசுதான் தருகிறது.

ரூபா 3.50 என்ற விலையைக் குறைத்து ரூபா 2 இற்கு 20 கிலோ அரிசி தருவோம் என்பதைக் காரசாரமாக விமர்சித்து வரும் வைகோ, அ.தி.மு.க. அறிவித்துள்ள 10 கிலோ இலவச அரிசிக்கு என்ன சொல்லப் போகிறார்?

கருணாநிதியின் வாக்குறுதியில் ஒரு குடும்ப அட்டைக்கு மாதத்துக்கு 20 கிலோ அரிசிக்கு கூடுதல் மானியம் ரூபா 30. ஜெயலலிதாவின் வாக்குறுதியில் குடுமப அட்டைக்கு 10 கிலோ அரிசி இலவசம் என்பதற்குக் கூடுதலாக மானியம் ரூபா 35 கூடுதல் மானியம் ரூபா 30 சாத்தியமில்லை என்று கேலி செய்த வைகோ, இப்போது கூடுதல் மானியம் சாத்தியம் என்று சொல்லப்போகிறாரா?

அண்ணன் கருணாநிதி சொன்னால் சாத்தியமில்லை. புதிய தங்கை ஜெயலலிதா சொன்னால் சாத்தியமா எனக் கூறப்போகிறாரா? எனக் கேள்வியெழுப்பியுள்ளார்.

# ஆட்சியை பிடிக்கும் அடித்தளமாக பாரதிய ஜனதா தனித்துப் போட்டி

## சுஷ்மா சுவராஜ் தெரிவிப்பு



கோவை—

தமிழகத்தில் ஆட்சியைப் பிடிக்கும் அடித்தளமாகவே தற்போது தனித்துப் போட்டியிடுகிறோம் என்று பாரதிய ஜனதா பொதுச் செயலாளர் சுஷ்மா சுவராஜ் கூறினார்.

அகில இந்திய பாரதிய ஜனதா பொதுச் செயலாளர் சுவராஜ் கோவை விமான நிலையத்தில் நிருபர்களிடம் கூறியதாவது -


தமிழக சட்ட மன்றத் தேர்தலில் நீண்ட காலத்திற்குப் பிறகு அ.தி.மு.க. - தி.மு.க. அணியில் இடம்பெறாமல் பாரதிய ஜனதா தனித்துப் போட்டியிடுகிறது. பாரதிய ஜனதா தலைமையில் 24 அமைப்புகள் கட்சியில் இடம்பெற்றுள்ளன. கடந்த முறை 4 தொகுதியில் வெற்றிபெற்றோம்.

இந்தத் தேர்தலில் 2 இலக்க எண்ணில் தொகுதியைப் பிடிப்போம். பாரதிய ஜனதா தனித்துப் போட்டியிடுவதற்கு மக்களிடத்தில் நல்ல வரவேற்பு இருக்கிறது. ஆட்சியைப் பிடிக்கும் அடித்தளமாகவே பாரதிய ஜனதா தனித்துப் போட்டியிடுகிறது.

தமிழகத்தில் குறைந்த விலைக்கு அரிசி வழங்குவதாக அ.தி.மு.க. - தி.மு.க. இரு கட்சிகளும் கூறிவருகின்றன. இது கேலிக்கூத்தாக இருக்கிறது. இரு கட்சிகளும் தமிழகத்தில் ஆட்சி நடத்தியுள்ளன. அப்போதெல்லாம் அரிசி வழங்குவது பற்றித்தெரிவிக்காமல் தேர்தல் நேரத்தில் சொல்வது ஏன்? இவ்வாறு சுஷ்மா சுவராஜ் கூறி னார்.




# சரத்குமார் மதிக்கப்படவில்லை என்பது தவறு என்கிறார் கருணாநிதி



சென்னை—

அரசியலுக்கு அப்பாற்பட்டு காமராஜரை மதிக்கின்ற இயக்கமாக தி.மு.க. இருக்கிறது என்று தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில் -

நடிகர் சரத்குமார் தி.மு.கவிலிருந்து விலகி அ.தி.மு.கவில் சேர்ந்திருக்கிறார். அவருக்கு தி.மு.கவில் முக்கியத்துவம் தரவில்லை என்று குற்றஞ்சாட்டுகிறார்கள்.

தி.மு.க. சார்பில் ஒருவர் மட்டும் தான் மாநிலங்களவைக்குத் தேர்வு செய்யப்படமுடியும் என்ற நிலையில், சரத்குமாருக்கு அந்தப் பதவி வழங்கப்பட்டது.

அவர் நடித்துக் கொண்டிருந்ததால் அமைசசரவையில் இடம்பெற முடியாமல் போனது.

கலைத்துறைப் பணி காரணமாக சரத்குமாருக்கு அமைச்சரவைப் பதவி வழங்க இயலவில்லை என்பதாலேயே அவர் மதிக்கப்படவில்லை என்பது பொருளல்ல.

விருதுநகரில் 2004 இல் நடந்த மண்டல மாநாட்டின் திறப்பாளர் சரத்குமார் - கடந்த மார்ச் 3, 4, 5 ஆம் திகதிகளில் திருச்சியில் நடந்த மாநில மாநாட்டில், மாநாட்டுத் தலைவரை வழிமொழியும் முக்கிய பொறுப்பில் சரத்குமார் பேசினார்.

காமராஜர் முதல்வராக இருந்தபோது - நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்தது. அப்போது தி.மு.க. நடுநிலை வகித்து வெளிநடப்புச் செய்தது. குடியாத்தம் இடைத் தேர்தலில் காமராஜரை தி.மு.க. ஆதரித்தது.

காமராஜருக்கு சிலைகள், நினைவு மண்டபம் போன்ற நினைவுச் சின்னங்கள் அமைக்கப்பட்டன. சென்னை விமான நிலையத்துக்கு காமராஜர் பெயரைச் சூட்டச் செய்தோம்.

இப்போதைய தேர்தல் அறிக்கையில், காமராஜர் பிறந்த நாளை கல்விக் கண் திறந்த நாள் என்று கொண்டாடப்படும் என அறிவித்தோம்.

கட்சி வேறுபாடு, அரசியல் மாறுபாடு இருந்தாலும் அவற்றைக் கடந்து காமராஜரிடம் தி.மு.க. கொண்டுள்ள மதிப்பை இது காட்டுகிறது என்று கருணாநிதி கூறியுள்ளார்.

# அ.தி.மு.கவின் தோல்விக்கு வைகோ முக்கியமானவராம்

## பா.ஜ.க. தலைவர் ராதாகிருஷ்ணன்

சென்னை—

அ.தி.மு.கவின் தோல்விக்கு ம.தி.மு.க. தான் முக்கிய காரணமாக இருக்கும் என்று தமிழ்நாடு பாரதிய ஜனதா கட்சித் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் கூறினார்.

சென்னையில் நிருபர்களிடம் அவர் கூறியதாவது -

பொடா சட்டத்தை பா.ஜ.க. அரசு கொண்டுவந்ததென்றும் - அதை அமுல் செய்து தம்மைக் கைதுசெய்து 19 மாதங்கள் சிறையில் வைத்ததற்காக முதல்வர் ஜெயலலிதாவைக் குறை கூறுவது தவறு என்றும் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கூறியுள்ளார்.

இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தபோதே வைகோவைக் கைது செய்து வேண்டும் என பிரதமர் வாஜ்பாய் எழுதியதைப் போல் அவர் பேசுவது சரியல்ல. வைகோ போல சந்தர்ப்பவாத அரசியலை யாருமே செய்யவில்லை. அ.தி.மு.க. அணியின் தோல்விக்கு முழுக் காரணமாக இருக்கப் போகிறவர் வைகோ தான் என்றார் சி.பி. ராதாகிருஷ்ணன்.

# தேர்தல் தோல்வி பயத்தினாலேயே புதிய சலுகைகளை ஜெயலலிதா அறிவிப்பு

## தயாநிதி மாறன்



பெரம்பலூர்—

தேர்தல் தோல்வி பயம் கரணமாகவே இலவச அரிசி போன்று பல்வேறு புதிய சலுகைகளை தமிழக முதல்வர் ஜெயலலிதா அறிவிக்கிறார் என மத்திய அமைச்சர் தயாநிதி மாறன் தெரிவித்தார்.

தி.மு.க. தலைவர் கருணாநிதி ரூபா 2 இற்கு ஒரு கிலோ அரிசி வழங்கப்படும் என அறிவித்தபோது அது நடக்குமா? சாத்தியமா? செயற்படுத்த முடியுமா? என கேலியும், கிண்டலும் செய்தவர் தற்போது தேர்தல் தோல்வி பயம் வந்துவிட்டதால் பல்வேறு சலுகைகளை அறிவித்து வருகிறார். அதனைத் தேர்தல் அறிக்கையில் சொல்லாமல் விட்டுவிட்டு தற்போது சொல்கிறார் - அதுவும் 10 கிலோ அரிசியை கிலோவுக்கு ரூபா 3.50 கொடுத்து வாங்கினால்தான் 10 கிலோ இலவசம்.

2001 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தவுடன் குடும்ப அட்டையில் குளறுபடி செய்தனர். குடும்ப அட்டைகளில் எச் முத்திரை போட்டு எதுவும் இல்லை என்றனர். பாதயாத்திரை சென்றதை சன் தொலைக்காட்சியில் காட்டவில்லை எனக் கூறும் வைகோ, ஜெயலலிதா ஆட்சியை வீட்டுக்கு அனுப்புவதற்காக பாதயாத்திரை சென்றார். தற்போது அவர்களுடன் கூட்டணி வைத்துள்ளார்.

ஜெயலலிதா வளர்ப்புப் பிள்ளைக்கு ரூபா 100 கோடி செலவில் திருமணம் செய்து வைத்தார். பின்னர் அவரையே கஞ்சா வழக்கில் கைதுசெய்து சிறையில் அடைத்தார். இன்னும் 3 வாரத்தில் வீட்டுக்குச் செல்லும் நிலையில் தற்போது சலுகைகளை அறிவித்து வருகிறார் என்றார் தயாநிதி மாறன்.

## நமது ஈழநாடு பத்திரிகை தமிழ் கலை, இலக்கிய ஊடக நண்பர்கள் அமைப்புடன் இணைந்து நடத்தும்

## எழுத்தாளர் செம்பியன் செல்வன் நினைவு சிறுகதைப் போட்டி

- ☆ சிறுகதைகள் சமகால வாழ்வியலை சித்தரிப்பவையாக அமைதல் வேண்டும்.
- ☆ ஏற்கனவே பிரசுரமான கதைகளாகவோ, பிரசுரத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டவையாகவோ இருக்கக் கூடாது.
- ☆ புனைபெயரில் எழுதுபவர்கள் தங்கள் சொந்தப் பெயர், முகவரியை தெளிவாக தனியான தாளில் குறிப்பிடல் வேண்டும்.
- ☆ சிறுகதைகள் தாளின் ஒரு பக்கத்தில் கையெழுத்துப் பிரதியாயின் 8 பக்கங்களுக்கும், தட்டச்சு பிரதியாயின் 4 பக்கங்களுக்கும் மேற்படலாகாது.

**முதல் மூன்று இடங்களைப் பெறும் சிறுகதைகளுக்கு முறையே ரூபா 5000, 3000, 2000 பணப்பரிசில்கள் வழங்கப்படும்.**

பரிசு பெற்ற கதைகளோடு மேலும் ஐந்து சிறந்த கதைகள் நமது ஈழநாடு பத்திரிகையில் பிரசுரிக்கப்படும். உங்கள் சிறுகதைகள் வந்து சேரவேண்டிய இறுதி நாள் - 30.04.2006

அனுப்பவேண்டிய முகவரி:-

**எழுத்தாளர் செம்பியன் செல்வன்**
**நினைவு சிறுகதைப் போட்டி,**
**பிரதம ஆசிரியர், நமது ஈழநாடு,**
**267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# மன்னாரில் கிளைமோருக்கு கடற்படையினர் இருவர் காயம்!

மன்னார் —

மன்னார் – பேசாலைப் பகுதியில் நேற்றுக் காலை 11 மணியளவில் கடற்படையினரின் தண்ணீர் பவுசர் மீது கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டது.

கடற்ப்படை முகாம்களுக்கு தண்ணீர் விநியோகம் செய்துவரும் பவுசரே தாக்குதலுக்கு இலக்கானது. இந்தச் சம்பவம் பேசாலை காட்டாஸ் பத்திரியில் இடம்பெற்றுள்ளது.

காட்டாஸ்பத்திரியில் உள்ள கிணற்றுக்கு தண்ணீர் எடுப்பதற்காக கடற்படையினர் பவுசரில் சென்றபோது அங்கு மண் குவியலுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த கிளைமோர் வெடிக்க வைக்கப்பட்டதில் இரண்டு கடற்படையினர் காயமடைந் தனர்.

காயமடைந்தவர்கள் கடற்படையைச் சேர்ந்த திஸநாயக்க, ஹேவ மன்ன என தெரியவருகிறது. காயமடைந்த இரு கடற்படையினரும் மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின் உடனடியாக அனுராதபுரம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இந்தச்சம்பவத்தை தொடர்ந்து பேசாலைப் பகுதியில் பொதுமக்கள் கடற்படையினரால் தாக்கப்பட்டனர். இந் நிலையில், பிற்பகல் 3 மணி வரை போக்குவரத்து தடைப்பட்டு, கடைகள் மூடப்பட்டிருந்தன. கிளைமோர் வெடித்த பேசாலை காட்டாஸ் பத்திரியை அண்டிய பகுதிகளில் பல மணிநேரம் பதற்றம் நிலவியது. இந்தத் தாக்குதலையடுத்து பேசாலை 8 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த மக்களும், பிரதான வீதி மக்களும் இடம் பெயர்ந்து – பேசாலை ஆலயத்தில் தஞ்சம் புகுந்தனர். (மோ)

## செல்போன் மணியை...

தம்மை தாண்டிச் செல்வதானால் அடையாள அட்டையை தந்துவிட்டுச் செல்லும்படி கூறினர். அத்துடன் மகனது அடையாள அட்டையின் இலக்கத்தை கேட்டுப் பதிவுசெய்து விட்டுத்தான் தொடர்ந்து செல்ல அனுமதித்தனர்.

உறவினர் வீடுகளில் சென்று பார்த்தபோதும் மகன் அங்கு இல்லையெனத் தெரிந்தபின் மீண்டும் அவரது கையடக்கத் தொலைபேசிக்கு அழைப்பு ஏற்படுத்தினோம். தொலைபேசி அழைப்பு கிடைத்தபோதும் பதில் எதுவும் வரவில்லை.

இதன்னயடுத்து தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தியவாறே திரும்பிச் சென்றுகொண்டிருந்தோம். படையினரின் காவலரணை கடந்து 50 மீற்றர் தூரம் சென்றபோது தொலைபேசி ஒலிக்கும் சத்தம் கேட்டது.

அங்கு சென்று பார்த்தபோது மகன் சடலமாக வீதியோரத்தில் கிடந்ததாகவும் அருகில் கூடவே இரண்டு சடலங்கள் கிடந்ததைக் கண்டாதாகவும் தெரிவித்த அவர்- என்ன செய்வது என்று தெரியாத நிலையில் அச்சுவேலிப் பொலிஸாருக்கு தகவல் கொடுத்தபோதும் அவர்கள் அதற்கான பதில் எதுவும் வழங்கவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இந்த இளைஞர்கள் ஓட்டோவில் திரும்பிக்கொண்டிருந்தபோது காவலரணில் இருந்த படையினர் வழிமறித்து திரும்பி வந்த பாதைக்கே கூட்டிச் சென்றதாகவும் – அப்போது சைக்கிளில் இன்னொரு இளைஞர் வந்துகொண்டிருந்ததாகவும் சம்பவத்தை நேரில் கண்ட ஒருவர் தெரிவித்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

படையினர் ஓட்டோவில் உள்ள 4 பேரையும் கூட்டிச்சென்ற சிறிது நேரத்தின் பின்னர் அழுகுரல் கேட்டதாகவும் அதையடுத்து சரமாரியாக துப்பாக்கி வேட்டுக்கள் கேட்டன. இரவு 7.45 மணியளவிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது என அவர் குறிப் பிட்டதாக கூறப்படுகிறது.

ஓட்டோவில் சென்ற 4 இளைஞர்களையும் அடித்து துன்புறுத்திக் கொண்டிருந்தபோது, ஓட்டோவின் பின்னால் தனது வீடுநோக்கி சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இளைஞர் சம்பவத்தை பார்த்துவிட்டார் என்பதற்காக அவரையும் சுட்டுக் கொலை செய்திருக்கலாம் எனத் தெரிவித்ததாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## கிளிநொச்சிக்கு...

விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனுடன் தளபதிகளின் பயண ஒழுங்கு, ஜெனிவா பேச்சு உள்ளிட்ட பல்வேறு முக்கிய விடயங்கள் குறித்து பேசவுள்ளார்.


**யாழ் மண்ணில்!**

முழு மையான கணக்கியல் சார்
கணினிக் கற்கை நெறிகள் ஆரம்பமாகின்றது.
பல்கலைக்கழக மாணவர்கள்,
உயர்தொழிநுட்ப மாணவர்கள்,
A/L நிறைவு செய்திருக்கும் மாணவர்கள்,
மற்றும் கணக்கியல் துறையில்
ஆர்வமுள்ளவர்களுக்கு, முதன் முதலாக,

**Diploma in Office Management**

- AccPac
- MYOB
- Tally
- Quick Books Premier

பதிவுகளுக்கு முந்துங்கள்!

பிரிவு I 20.04.2006 காலை 8.30
பிரிவு II 20.04.2006 மாலை 6.30

**CICS Computer Technologies**
# 87, Palaly Road, Thirunelvely, Jaffna.
E-mail: cicsjaffna@gmail.com

புத்தாண்டையும் விடுமுறையினையும் பயனுள்ளதாக்க
CICS உடன் இன்றே இணையுங்கள்!


# குடாநாட்டு மக்கள் அனைவரையும் வன்னி நோக்கி நகர வேண்டுகோள்

யாழ்ப்பாணம் —

ஒவ்வொரு தமிழனும் தேசத்தின் பாதுகாப்பையும், தமது பாதுகாப்பையும் உறுதியுடன் உடன் நாடுவதைத் தவிர வேறு வழியில்லை. சிங்களக் காடையர்களின் கொடூரத் தாக்குதலிலிருந்து பாதுகாத்துக்கொள்ள வன்னி நோக்கி நகருங்கள் என யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது –

புத்தூர் – அந்திரான்வெளி கொலைச் சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

எமது இனம் காட்டுமிராண்டித் தனமாக சிங்களக் காடையர்களாலும் ஆயுதப்படையினராலும் கொல்லப் பட்டபோது நாகரீகமான முறையில் அதனை எதிர்த்த எமது மக்களை ஆயுதமுனையில் அடக்க முற்பட்ட போதுதான் மக்கள் கொதிப்படைந்து ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத் தனர்.

எமது தேசத்தை மீட்பதற்காக விடுதலைப் போரில் நாங்கள் குதித்த போது திகைப்படைந்த சிங்கள தேசம் எங்களை சமாதான மேசைக்கு அழைத்துவிட்டு...!

நாங்கள் சர்வதேசத்தின் முன்னால் எங்களுக்கான நீதியைக் கேட்டு அமைதி காக்கும் இவ்வேளையில் – மிகவும் காட்டுமிராண்டித்தனமாக, மனித இனமே வெட்கித் தலைகுனியும் அளவிற்கு ஏதுமறியா அப்பாவிப் பொதுமக்களை கண்டதுண்டமாக வெட்டியும், சுட்டும் கொல்வதை யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் வன்மையாகக் கண்டிக்கிறது.

யாழ்ப்பாணம் – புத்தூர் அந்திரான் வெளிப் பகுதியில் நேற்றுமுன்தினம் ஐந்து அப்பாவி இளைஞர்கள் இராணுவத்தினராலும், துணை இராணுவக் குழுவினராலும் வாள்வெட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளனர்.

வடக்கு – கிழக்குப் பகுதிகளில் இதே பாணியில் தமிழின அழிப்பு நடவடிக்கையில் குறிப்பாக இளைய தலைமுறையினரை இலக்குவைத்து அழிப்பதிலே அரசும், இராணுவமும் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது.

இந்தச் செயற்பாடுகளால் தமிழினமே கொதிப்படைந்து இனவெறிகளுக்கெதிரான போராட்டங்களில் நேரடியாகக் குதிக்கவேண்டிய நேரமும் ஏற்பட்டுள்ளது.

இதை ஒவ்வொரு தமிழ்மகனும் ஆழ உணர்ந்தவர்களாக உயிர்காப்பு நடவடிக்கையில் துணிந்து இறங்க வேண்டியுள்ளது.

ஒவ்வொரு தமிழனும் தேசத்தின் பாதுகாப்பையும், தனது பாதுகாப்பையும் உறுதியுடன் உடன்நாடுவதைத் தவிர வேறுவழியில்லை.

எனவே, எவ்வழி நல்வழி – அவ்வழி நம்வழி என உறுதியுடன் செயற்பட்டு ஏற்கனவே நாம் கோரியதைப் போன்று தேசியத்தையும் உங்களையும் பாதுகாத்துக்கொள்ள உரிய பாதுகாப்பான வன்னி நோக்கி நகருமாறு அனைவரையும் யாழ்ப்பாண மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் வேண்டிக்கொள்கிறது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நகரில் துப்பாக்கி வேட்டு!

யாழ்ப்பாணம் —

யாழ்ப்பாணம் – பிறவுண் வீதிச் சந்தியிலுள்ள காவலரணில் கடமையாற்றிய படையினரால் நேற்றிரவு 8 மணியளவில் சரமாரியான துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

காவலரணிலிருந்த படையினரால் திடீரென மேற்கொ[illegible]பட்ட துப்பாக்கிப் பிரயோகம் சுமார் 5 நமிடங்கள்வரை தொடர்ச்சியாகக் கேட்டதாகவும் – இத்தகைய வேட்டுச் சத்தத்தால் அருகிலுள்ள மக்கள் அச்சம் காரணமாக வெளியில் வரமுடியாத நிலையில் வீட்டினுள்ளே முடங்கி இருந்ததாகவும் தெரியவருகிறது. படையினரால் மேற்கொள்ளப்பட்ட இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் எதற்காக மேற்கொள்ளப்பட்டதென உடனடியாக அறிந்துகொள்ள முடியவில்லை.

## புத்தூர்...

தினர் நடத்திய குண்டுத் தாக்குதலில் மாணவனும், இளைஞர் ஒருவரும் கொல்லப்பட்டனர். யாழ்ப்பாணத்தில் இராணுவத்தாலும் இராணுவப் புலனாய்வாளர்களாலும், ஈ.பி.டி.பியினராலும் இதுவரை 17 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

ஈ.பி.டி.பியினர் கேட்பதைவழங்க மறுத்த வர்த்தகர் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இதேபோல முஸ்லிம் வர்த்தகர் ஒருவருக்கு கொடுக்க வேண்டிய பணத்தை கொடுக்க மறுத்த அந்த நபர் – ஈ.பி.டி.பியினருடனும், இராணுவப் புலனாய்வாளர்களுடனும் இணைந்து அப்பாவி முஸ்லிம் வர்த்தகரை ஈனத்தனமான முறையில் படுகொலை செய்துள்ளனர்.

நாளாந்த ஜீவனோபாயத்திற்கான தொழில்களை புரிந்து வந்த அப்பாவி இளைஞர்கள் ஐந்து பேரை புத்தூர் இராணுவ முகாமில் உள்ள இராணுவத்தினர் சித்திரவதைசெய்துவிட்டு சுட்டுப் படுகொலை செய்துள்ளனர். சிங்கள இராணுவத்தினரின் இந்த அநாகரிக செயல் தமிழ் மக்கள் ஒவ்வொரு வரையும் கொதிப்படைய வைத்துள்ளது.

சர்வதேச அனுசரணையாளர்களின் ஏற்பாட்டுடன் நடைமுறையில் உள்ள போர்நிறுத்த காலத்திலேயே இந்தக் கோரப்படுகொலைகள் மூலம் மக்களிடம் மரண பீதியை ஏற்படுத்தி, அச்சுறுத்தி, அடிபணிய வைப்பது இவர்களது நோக்கமாகும்.

இதே இடத்தில் முன்னர் இராணுவத்தினரால் ஒரு பொதுமகன் அடித்துக் கொல்லப்பட்டார். இந்தப் படுகொலைச் சம்பவம் நடைபெற்ற போது அந்த வீதியால் சென்ற கந்தசாமி கௌரிபாலன் என்பவர் இராணுவத்தினரால் வழிமறிக்கப்பட்டு படுகொலைசெய்யப்பட்டார். வெறிபிடித்த இராணுவத்தினரே இந்தப் படுகொலையையும் புரிந்துள்ளனர்.

எமது உறவுகளுக்கு தோண்டிய அதே புதைகுழிக்குள்ளேயே புதைகுழி வெட்டுவோம் என மக்கள் குமுறி எழுகின்றனர். இப்படுகொலைகள் பற்றி கண்காணிப்புக் குழுவுக்கு முறையிட்டுள்ளோம். இது ஒவ்வொரு தமிழரினதும் தேசிய ஆன்மாவை ஒரு கணம் உலுப்பி உறைய வைத்துள்ளது.

இச்சம்பவமானது தமிழர்கள் தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்வதற்கு தயாராகுவதே ஒரே வழி என உணர்த்தி நிற்கின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புத்தூர் படுகொலை...

இடம்பெற்றது.

இந்தக் கோரச் சம்பவத்தில் புத்தூர் கிழக்கைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான கந்தசாமி கௌரிபாலன் (வயது 32), செல்லன் கமலராசன் (வயது 25), தங்கராஜா கவீந்திரன் (வயது 23), மகாதேவன் கிசோக்குமார் (வயது 22), சுப்பிரமணியம் கண்ணதாசன் (வயது 27) ஆகியோரே படுகொலை செய்யப்பட்டவர்களாவர்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது –

நேற்றுமுன்தினம் மாலை 6.50 மணியளவில் புத்தூர் சந்தியிலிருந்து ஊறணியிலுள்ள நண்பன் ஒருவரை வீட்டில் கொண்டுசென்று விடுவதற்காக ஓட்டோ ஒன்றில் ஐந்து இளைஞர்களும் சென்றனர்.

அப்போது ஈஸ்வரன் கோயிலுக்கு முன்பாக உள்ள காவலரணிலிருந்த படையினர் ஓட்டோவை வழிமறிந்து சோதனையிட்டனர்.

எங்கே செல்கிறீர்கள் என படையினர் விசாரித்தபோது ஊறணியிலுள்ள நண்பர் ஒருவரை இறக்கிவிட்டு வரவுள்ளதாகக் கூறிச்சென்றனர்.

இவர்களில் ஊறணியில் உள்ள நண்பரை அவரது வீட்டில் இறக்கிவிட்டு எஞ்சிய நான்கு பேரும் திரும்பிக் கொண்டிருந்தபோதே அந்திரான் வெளி இராணுவக் காவலரணில் நின்ற படையினரால் வழிமறிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

ஓட்டோவில் வந்த நால்வரையும் அவ்வழியே சைக்கிளில் வந்த இளைஞர் ஒருவரையும் கடுமையாகத் தாக்கிய பின்னர் தரவைப் பகுதியில் – ஓடவிட்டு தலையில் சுட்டு இந்தப் படுகொலைகள் நிகழ்த்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 7.45 மணியளவில் இடம்பெற்றதாகத் தெரியவருகிறது.

தனது சகோதரரை தேடிச்சென்ற ஒருவர் சடலங்களைக் கண்டபின்னர் அச்சுவேலி பொலிஸாருக்கு தகவல் கொடுத்ததாகவும் ஆனால், அவர்கள் இரவு சம்பந்தப்பட்ட இடத்துக்கு வரவில்லையென்றும் பொதுமக்கள் தரப்பில் கூறப்பட்டது.

எனினும் இராணுவத்தரப்போ தாம் அச்சுவேலி பொலிஸாருடன் இரவு 9.50 மணிக்குச் சென்று சடலங்களைப் பார்வையிட்டதாகக் கூறியுள்ளனர்.

நேற்றுக்காலை இந்தச் சம்பவம் குறித்த செய்தி குடாநாடெங்கும் பரவியபோது பொதுமக்கள் கடும் அதிர்ச்சியடைந்தனர்.

நேற்றுக்காலை சடலங்கள் கிடந்த பகுதிக்கு பொதுமக்கள் செல்வதற்கு படையினர் தடைவிதித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

நேற்று முற்பகல் 11 மணியளவில் சம்பவத்துக்குச் சென்ற மல்லாகம் மாவட்ட நீதிபதி சறோஜினி இளங்கோவன் சடலங்களை பார்வையிட்ட பின்னர் அச்சுவேலி பொலிஸாரால் இவை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டன. இந்தச் சடலங்கள் வைத்திய பரிசோதனைக்காக பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை – புத்தூர் கிழக்குப் பகுதியில் படையினரால் மேற்கொள்ளப்பட்ட இந்தக் கோரச் சம்பவத்தால் அப்பகுதி மக்களிடையே அச்சமும், பதற்றமும் தோன்றியுள்ளது.

சம்பவம் இடம்பெற்ற இடத்தில் பெருமளவான படையினர் குவிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இதேவேளை – சம்பவ இடத்தில் இருந்து சேதமடைந்த நிலையில் ஓட்டோ ஒன்றையும், சைக்கிள் ஒன்றையும் அச்சுவேலி பொலிஸார் எடுத்துச்சென்றனர்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களில் கௌரிபாலன் என்பவர் மாநகர சபை பணியாளராவார். கவீந்திரன், கண்ணதாசன் ஆகிய இருவரும் ஓட்டோ சாரதிகளாவர். மற்றைய ஒருவர் மின் இணைப்பாளர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## மரண அறிவித்தல்

### ஐயாத்துரை சிவனேசன்

(ஓய்வுபெற்ற லிகிதர்)

திருநெல்வேலியை பிறப்பிடமாகவும், கோண்டாவில் நெட்டிலுப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை சிவனேசன் அவர்கள் 17.04.2006 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை – பொன்னம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்ற வல்லிபுரம் இரத்தினம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற சரோஜினிதேவியின் அன்புக்கணவரும், பாஸ்கரன் (சுவிஸ்), பிரபாகரன் (சுவிஸ்), கோபிகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், நிரூபி (சுவிஸ்), லோகிதகலா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ரதிவர்ணனின் அன்பு பேரனும், சுந்தரலிங்கம், விஜயலட்சுமி, தில்லைநாதன், யோகேஸ்வரன் ஆகியோரின் சகோதரரும், நளாயினி, கதிர்காமராசா, மகாராணி, ரஞ்சிதமலர் ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் (20.04.2006) இன்று வியாழக்கிழமை முற்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நெட்டிலுப்பாய்,
கோண்டாவில். [2246]

தகவல்
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை இல.[illegible], நாவல[illegible] வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 20.04.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.